©
GOVERNMENT OF TAMIL NADU
2024

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Rs. 18.40 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

**PUBLISHED BY AUTHORITY**

No. 8] CHENNAI, WEDNESDAY, FEBRUARY 21, 2024
Maasi 9, Sobakiruthu, Thiruvalluvar Aandu–2055

## Part VI—Section 2

**Notifications of interest to a section of the public issued by Heads of Departments, etc.**

### NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

**CONTENTS**

| | Pages. |
|---|---|
| TAMIL NADU ELECTRICITY REGULATORY COMMISSION, CHENNAI | |
| The Tamil Nadu Electricity Regulatory Commission State Advisory Committee Regulations, 2004 .. .. .. .. .. .. .. .. | 18-19 |
| Amendments to Distribution Standards of Performance Regulations, 2004 .. .. | 19-61 |

**தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், சென்னை**

**தமிழ்நாடு மின்சாரப் பகிர்மானச் செயல் திறச் செந்தரங்களுக்கான ஒழுங்குமுறைவிதிகள், 2004**

**(அறிவிக்கை எண் தமிஒஆ/செசெஒ9/1-13/26.12.2023)**

**(ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டதன் தமிழாக்கம்)**

2003–ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்திய சட்டம் 36/2003) 181–ஆம் பிரிவுடன் சேர்த்து படிக்கப்படும் 57–ஆம் பிரிவு மற்றும் 86 (1) (i) உட்பிரிவின் படியும் இதன்பொருட்டு அதனை இயல்விக்கும் அனைத்துப் பிற அதிகாரங்களையும் செலுத்தி தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், 2004–ஆம் ஆண்டு வெளியிட்ட தமிழ்நாடு மின்சாரப் பகிர்மானச் செயல்திறச் செந்தரங்கள் ஒழுங்குமுறை விதிகளுக்கு, பின்வரும் திருத்தங்களை இதன் மூலம் செய்கிறது. அதன் வரைவு, மேற்கூறப்பட்ட சட்டத்தின் 181–ஆம் பிரிவின் (3)–ஆம் உட்பிரிவின் மூலம் வேண்டுறுத்தப்பட்டவாறு முன்னதாக வெளியிடப்பட்டுள்ளது.

2. இத்திருத்தங்கள், ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்பட்ட நாளிலிருந்து நடைமுறைக்கு வரும்.

**திருத்தங்கள்**

**மேற்கூறிய ஒழுங்குமுறை விதிகளில்:–**

**1. (அ) 2-ஆம் ஒழுங்குமுறை விதியில், (ii)-ஆம் உள்ஒழுங்குமுறைவிதிக்குப் பிறகு கீழ்கண்ட உள் ஒழுங்குமுறைவிதிகள் புகுத்தப்படும், அதாவது:-**

“(iii) ‘அமைப்பு சராசரித் தடங்கல் காலவரை குறியீடு’ (SAIDI) என்பது அறிக்கையிடல் காலத்தில் ஒரு மின்நுகர்வோருக்கு ஏற்படும் நீடித்த மின்தடைகளின் சராசரி கால அளவைக் குறிக்கிறது.

இது அனைத்து நுகர்வோரின் நீடித்த மின்தடை கால அளவின் (நிமிடங்களில்) கூட்டுத்தொகையை மொத்த நுகர்வோரின் எண்ணிக்கையால் வகுப்பதன் மூலம் தீர்மானிக்கப்படுகிறது.

(iv) ‘அமைப்பின் சராசரி தடங்கல் நிகழ்வெண் குறியீடு’ (SAIFI) என்பது அறிக்கையிடல் காலத்தில் ஒரு மின்நுகர்வோருக்கு ஏற்படும் நீடித்த மின்தடைகளின் சராசரி நிகழ்வினைக் குறிக்கிறது. இது அனைத்து நுகர்வோர் நீடித்த மின்தடை நிகழ்வுகளின் கூட்டுத்தொகையை மொத்த நுகர்வோரின் எண்ணிக்கையால் வகுப்பதன் மூலம் தீர்மானிக்கப்படுகிறது.”

**(ஆ) 2-ஆம் ஒழுங்குமுறை விதியின், உள் ஒழுங்குமுறைவிதி (iii) என்பது, உள் ஒழுங்குமுறைவிதி (v) என மறு இலக்கமாக்கப்படும்.**

**2. 4-ஆம் ஒழுங்குமுறைவிதி மற்றும் அது தொடர்பான உள்ளீடுகளுக்கு பதிலாக பின்வரும் ஒழுங்குமுறைவிதி மற்றும் அது தொடர்பான உள்ளீடுகள் மாற்றியமைக்கப்படும், அதாவது:-**

**“4. மின்வழங்கல் கோரிக்கையின் போது உரிமதாரரின் கடமைகள்:**

மின்வழங்கலுக்கான உரிமதாரரின் கடமைகள் கீழ்வருமாறு:

(1) ஒவ்வொரு பகிர்மான உரிமதாரரும் ஏந்தவொரு இருப்பிடத்துக்கான சொந்தக்காரரோ அல்லது அதில் குடியிருப்பவரோ விண்ணப்பம் அளித்து அவ்விருப்பிடத்திற்கு மின்வழங்கல் வேண்டினால் அத்தகைய இருப்பிடத்திற்கு மின்வழங்கல் வேண்டி வந்த விண்ணப்பத்தைப் பெற்ற ஒரு வார (ஏழு பணி நாட்கள்) காலத்திற்குள் மின்வழங்கல் தர வேண்டும்.

அவ்வாறான மின்வழங்கலை தரும்பொருட்டு, புதிய பகிர்மான மின்வாயில் நீட்டிப்போ, புதியதுணைமின் நிலைய இயக்கிவைப்போ தேவைப்பட்டால், பகிர்மான உரிமதாரர் அத்தகைய இருப்பிடத்திற்கு, உரிய நீட்டிப்போ அல்லது இயக்கிவைப்போ முடிந்த உடனுடனுமோ, அல்லது இந்த ஒழுங்குமுறை விதித்தொகுப்பில் குறிப்பிடப்பட்டுள்ள காலத்திற்குள்ளோ, மின்வழங்கல் தர வேண்டும்.

மேலும் அவ்விருப்பிடம், மின்சார வழங்கல் ஏதும் இல்லாத கிராமமாகவோ, சிற்றூராகவோ, வட்டாரமாகவோ இருந்தால், ஆணையம் செப்பியபடி அவ்வூர் அல்லது அச்சிற்றூர் அல்லது அவ்வட்டாரத்திற்கு மின்மயமாக்கும் ஏற்பாடுகள் செய்ய வேண்டிய தேவைகளை கருத்தில் கொண்டு மேற்சொன்ன மின் வழங்கும் காலத்தை நீட்டிக்கலாம்.

**விளக்கம்:**

இந்த உள்ஒழுங்குமுறைவிதியின் நோக்கங்களின் படி ‘விண்ணப்பம்’ என்பது தேவையான கட்டணங்கள் மற்றும் பிற இணக்கங்களைக் காட்டும் ஆவணங்களுடன் பொருத்தமான படிவத்தில் அனைத்து வகையிலும் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பமாகும்.

(2) மின்வழங்கல் தேவைப்படும் இருப்பிடத்திற்கு மின்வழங்கலை தர, மின்கலன் வைத்தலோ, மின்தொடர் நீட்டித்தலோ தேவைப்பட்டால் அத்தகைய ஏற்பாட்டைச் செய்ய வேண்டியது ஒவ்வொரு மின்பகிர்மான உரிமதாரரின் கடமையாகும்.

இருந்தபோதிலும், ஆணையத்தால் அவ்வப்போது குறிப்பிடப்பட்ட உரிய விலையை அல்லது கட்டணத்தை அந்நுகர்வோர் உரிமதாரருக்குச் செலுத்த இசைந்தாலொழிய எவரும் சொந்த இடத்திலோ அல்லது குடியிருக்கும் இடத்திலோ உரிமதாரரிடமிருந்து மின்சாரம் பெறுவதற்கோ, பெற்றுக் கொண்டிருப்பதைத் தொடர்வதற்கோ உரிமை இல்லை.

(3) ஒரு மின்பகிர்மான உரிமதாரர் குறிப்பிட்ட காலத்திற்குள் மின்சாரம் வழங்கத் தவறினால், இந்த ஒழுங்குமுறையின் 21—வது விதியில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு இணங்க விண்ணப்பதாரருக்கு உரியத்தொகை செலுத்த வேண்டும்.

எனினும் தனது பெயரிலுள்ள வேறு ஏதேனும் மின்இணைப்பு தொடர்பாக உள்ள நிலுவைத்தொகையை விண்ணப்பதாரர் செலுத்தத் தவறிய நிலையில் மின்பகிர்மான உரிமதாரர் அவ்விண்ணப்பதாரருக்கு மின்சாரம் வழங்க மறுப்பார்.

(4) உரிமதாரர்கள் மின்வழங்கலுக்கு, பின்வரும் கால அட்டவணைகளைக் கடைபிடிக்க வேண்டும்.:

அட்டவணை I

| வகையினம் | தாழ் அழுத்தத்திற்கான கால அட்டவணை |
|---|---|
| (அ) நீட்டிப்பு அல்லது மேம்பாட்டுப் பணி எதுவும் உள்ளடங்காதவை | கூடிய மட்டும் 3 நாட்களுக்குள், ஆனால் 7 நாட்களுக்கு மிகாமல் |
| (ஆ) மின்பகிர்மான மின் மாற்றிகள் இல்லாமல் நீட்டிப்பு மற்றும் மேம்பாடு உள்ளடக்கியவை. | 60 நாட்கள் |
| (இ) மின்பகிர்மான மின் மாற்றிகளுடன் நீட்டிப்பு மற்றும் மேம்பாடு உள்ளடக்கியவை. | 90 நாட்கள் |

அட்டவணை II

| வகையினம் | உயர் அழுத்தம் / அதி உயர் அழுத்தத்திற்கான கால அட்டவணை | |
|---|---|---|
| | உயர் அழுத்தம் | அதி உயர் அழுத்தம் |
| (அ) நீட்டிப்பு மற்றும் மேம்பாடு உள்ளடக்கியவை | 60 நாட்கள் | 150 நாட்கள் |
| (ஆ) துணை மின் நிலைய மின்மாற்றியின் திறனை மேம்படுத்துதல் / கூடுதல் மின்மாற்றியை அமைப்பதை உள்ளடக்கியவை | 120 நாட்கள் | 180 நாட்கள் |
| (இ) புதிய துணை மின்நிலையங்களை இயக்குவித்தலை உள்ளடக்கியவை | 270 நாட்கள் | 365 நாட்கள் |

(i) மின்பகிர்மான உரிமதாரர், செலுத்தப்பட வேண்டிய அனைத்து கட்டணங்களுக்கும், வகுத்துரைக்கப்பட்ட கட்டணங்கள் மற்றும் கட்டணம் செலுத்தும் கடைசி தேதியை சுட்டிக்காட்டும் கட்டண சீட்டு / அறிவிப்புக் கடிதத்தை மின்நுகர்வோருக்கு வழங்குதல் வேண்டும்.

நேரில் பெறப்பட்ட விண்ணப்பங்களுக்கு, முறையான ஒப்புகையுடன் கட்டண சீட்டு / அறிவிப்பு வழங்கப்பட வேண்டும். இணைய வழி விண்ணப்பங்களுக்கு, கணினி மூலம் பெறப்பட்ட கட்டண ஓலை / ஒப்புகைச்சீட்டு போதுமானதாகும்.

(ii) நுகர்வோர், மேலேயுள்ள கட்டணங்களைக் குறிப்பிட்ட காலத்திற்குள் செலுத்துதல் வேண்டும், ஆனால் கட்டண சீட்டு / அறிவிப்பு கடிதம் பெற்ற நாளிலிருந்து பதினைந்து நாட்களுக்கு மேற்படுதல் கூடாது.

(iii) சில விதிவிலக்கான / தகுதியான சந்தர்ப்பங்களில் முறையே, உயர் அழுத்த / அதி உயர் அழுத்த / தாழ்வழுத்த மின்னிணைப்புகளுக்காக வகுத்துரைக்கப்பட்ட பதினைந்து நாட்களுக்கு அப்பால் கட்டணங்களை செலுத்துவதற்கு அந்தந்தத் தலைமைப் பொறியாளர் மற்றும் கண்காணிப்புப் பொறியாளர் அல்லது உரிமதாரரால் இந்த நோக்கத்திற்காக நியமனம் செய்யப்பட்ட நபரால் அந்நுகர்வோருக்கு அனுமதி வழங்கப்படலாம்.

(iv) நிர்ணயிக்கப்பட்ட கட்டணங்களை செலுத்துவதற்கான கோரிக்கை அறிவிப்பு பெறப்பட்ட நாளிலிருந்து கட்டணம் செலுத்துவதற்காக விண்ணப்பதாரர் எடுத்துக் கொண்ட கால அளவு அல்லது உரிமதாரரால் தெரிவிக்கப்பட்ட குறைபாடுகளை சரிசெய்வதற்கு அல்லது குறிப்பிட்ட ஆவணங்களைச் சமர்ப்பிப்பதற்கு அல்லது விண்ணப்பதாரரால் நிறைவேற்றப்பட வேண்டிய மற்ற காரணங்களுக்காக எடுத்துக் கொண்ட கால அளவு மற்றும் கட்டுப்படுத்த முடியாத / விலக்க முடியாத இடையூறு காரணங்களினால் அல்லது மின்வழங்குதலின் தாமதத்திற்கு உரிமதாரரின் பொறுப்பிற்கு உட்படாத காரணங்களால் ஏற்படும் கால அளவு போன்றவை மேற்கண்ட கால அட்டவணையில் உள்ளடக்கப்படாது.

(v) இந்த கால அட்டவணை, கூடுதல் சுமைகளுக்கும் பொருந்தத்தக்கதாகும்"

**3. 6–ஆம் ஒழுங்குமுறைவிதி மற்றும் அது தொடர்பான உள்ளீடுகளுக்கு பதிலாக பின்வரும் ஒழுங்குமுறைவிதி மற்றும் அது தொடர்பான உள்ளீடுகள் மாற்றியமைக்கப்படும், அதாவது:–**

**“6. தற்காலிக மின்வழங்கல்:**

**(1) நுகர்வோர்களுக்கு, குடியிருப்பு வீடுகள், அடுக்குமாடி கட்டிடங்கள், வணிக வளாகங்கள், தொழிலக இருப்பிடங்கள் போன்றவற்றின் கட்டுமானப் பணிகளுக்கு, கட்டுமான பணிகள் நிறைவடைந்தவுடன் நிரந்தர மின்னிணைப்பாக மாற்றம் செய்யப்பட கூடிய தற்காலிக மின் இணைப்பு தேவைப்படலாம்.**

**(2) சர்க்கஸ், பாலம் கட்டுதல், தற்காலிக நிகழ்வின் போது தேவைப்படும் ஒளி அமைப்பு போன்ற முற்றிலும் தற்காலிக நோக்கங்களுக்காக மட்டும் கூட தற்காலிக மின்னிணைப்பு தேவைப்படலாம்.**

(3) மின்பகிர்மான முறையில் விரிவாக்கம் தேவைப்படாத நிலையில், தற்காலிகத் தேவைக்காக வழங்கப்படும் தற்காலிக மின்னிணைப்பு நாற்பத்தெட்டு மணி நேரத்திற்கு மிகாமல் வழங்கப்பட வேண்டும். மின்பகிர்மான முறையில் விரிவாக்கம் தேவைப்படும் இடங்களில், 4–ஆம் ஒழுங்குமுறைவிதியின் அட்டவணை I மற்றும் அட்டவணை II–இல் குறிப்பிடப்பட்டுள்ள கால நேர அட்டவணைகள் பின்பற்றப்பட வேண்டும்.

(4) தற்போதுள்ள சேவைக்கு பின் கட்டணம் செலுத்தும் முறையுடைய தற்காலிக மின்னிணைப்புகளுக்கு, தற்காலிக மின்விநியோக காலம் முடிவடைந்தவுடன், இருப்பு வைப்புத்தொகை மீதி இருப்பின், அந்நுகர்வோர் பெறும் நிரந்தர மின்னிணைப்பின் பாதுகாப்பு வைப்புத் தொகையுடன் சரி செய்யவோ அல்லது அதே மின்நுகர்வோரின் வேறொரு மின்னிணைப்பிற்கு மாற்றவோ அல்லது அதே மின்நுகர்வோரின் வங்கி கணக்கிற்கு மாற்றவோ அந்நுகர்வோரின் விருப்பத்தின்படி செயல்படுத்தப்பட வேண்டும்.

(5) பிற மின்னிணைப்பு(களு)க்கு மாற்ற விரும்பும் பட்சத்தில், அதற்குரிய விண்ணப்பம் கிடைக்கப்பெற்ற நாள் அல்லது மின்துண்டிக்கப்பட்ட நாள், இவற்றில் எது பிந்தையதோ அந்நாளிலிருந்து ஏழு நாட்களுக்குள் மின்உரிமதாரரால் மேற்கண்ட பணி மேற்கொள்ளப்பட வேண்டும். வங்கிக்கணக்கிற்கு மாற்ற விரும்பும் பட்சத்தில், சேவை துண்டிக்கப்பட்ட நாள் அல்லது நுகர்வோரின் வங்கிக் கணக்கு விவரங்கள் பெறப்பட்ட நாள் இவற்றில் எது பிந்தையதோ அந்நாளிலிருந்து ஏழுநாட்களுக்குள் மின்உரிமதாரரால் வங்கி கணக்கிற்கு மாற்றப்பட வேண்டும்.

(6) முற்றிலும் தற்காலிகத் தேவைக்காக வழங்கப்படும் தற்காலிக மின் இணைப்பை அவ்வப்போது திருத்தப்பட்ட மத்திய மின்சார ஆணையத்தின் (மின்னளவிகளை நிறுவுதல் மற்றும் இயக்குதல்) விதிமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ளபடி மின்னுரிமதரர் அல்லது நுகர்வோரால் வழங்கப்பட்ட முன்பணம் செலுத்தும் மின்னளவி (prepaid meter) மூலம் வழங்கப்பட வேண்டும்.”

**4. 9–ஆம் ஒழுங்குமுறை விதி மற்றும் அது தொடர்பான உள்ளீடுகளுக்கு பதிலாக பின்வரும் ஒழுங்குமுறை விதி மற்றும் அது தொடர்பான உள்ளீடுகள் மாற்றியமைக்கப்படும், அதாவது:–**

**“9. மின்கட்டண வீதம் / நுகர்வோர் விவரங்கள் மாற்றம் மற்றும் மின்தேவை குறைப்பு:**

(1) ஒரு மின்நுகர்வோர் முதன்முதலில் குறிப்பிட்ட பயன்பாட்டிற்காக பெற்ற மின்இணைப்பை, அதற்கு நிர்ணயிக்கப்பட்ட மின்கட்டண வீதப்பட்டியலிலுள்ள மற்ற பயன்பாட்டிற்காக பயன்படுத்த முடியும். புதிய பயன்பாட்டிற்கு வேறுபட்ட மின்கட்டண வீதம் பொருந்தினால், மின்நுகர்வோர் மின்பயன்பாட்டை மாற்றுவதற்கு முன் மின்உரிமதாரருக்கு விண்ணப்பிக்க வேண்டும்; மற்றும் மின்கட்டண மாற்றத்தைக் குறிக்கும் திருத்தப்பட்ட சோதனை அறிக்கை தயார் செய்யப்பட வேண்டும்.

(2) மின்நுகர்வோரிடமிருந்து விண்ணப்பம் பெறப்பட்ட நாளிலிருந்து ஏழு பணி நாட்களுக்குள் மின்உரிமதாரர் கட்டணவீதத்தை மாற்றி அமைக்க வேண்டும்.

(3) எனினும், எவ்வகை மின்நுகர்வோரும், அவரின் தாழ்வழுத்த மின்னிணைப்பில், எந்த தாழ்வழுத்த கட்டண வீதத்திலிருந்தும் (விவசாய மின் இணைப்பு தவிர), விவசாய மின்கட்டண வீதத்திற்கு மாற்ற அனுமதிக்கப்பட மாட்டார்.

(4) மின்பகிர்மான உரிமதாரர், பருவகால மாற்றத்திற்கு ஏற்றவாறு அளிக்கப்பட்ட தேவை குறைப்பு விண்ணபத்தினை, மின்வழங்கல் விதித்தொகுப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளின் அடிப்படையில் செயல்படுத்த வேண்டும்.

(5) நிரந்தர மின்தேவை குறைப்பு செயல்படுத்தப்படும் கால அளவு:

(i) ஏழு நாட்களுக்குள், அளவீட்டு அமைப்பு முறையில் மாற்றம் தேவைப்படாத போது.

(ii) நான்கு வாரங்களுக்குள், அளவீட்டு அமைப்பு முறையில் மாற்றம் தேவைப்படும்போது.

(6) மின்நுகர்வோர், முகவரி, தொலைபேசி எண், மின்னஞ்சல் முகவரி போன்ற விவரங்களில் உரிய ஆதாரங்களுடன் கோரும் மாற்றங்கள் / திருத்தங்கள் போன்றவைகள் உரிமதாரரின் நியமிக்கப்பட்ட அதிகாரியால் ஏழு நாட்களுக்குள் நிறைவேற்றப்பட வேண்டும்.”

**5. 11–ஆம் ஒழுங்குமுறைவிதியானது, பின்வருமாறு மாற்றியமைக்கப்படும், அதாவது:–**

**“11. பழுதடைந்த / எரிந்த மின்னளவியை மாற்றுதல்**

மின் உரிமதாரர் பெற்ற புகார்கள் மூலமாக அல்லது ஆய்வின்போது அல்லது மின்கணக்கெடுப்பின்போது மின்னிணைப்பிலுள்ள மின்னளவி ஒழுங்காக செயல்படவில்லை அல்லது பழுதடைந்துள்ளது அல்லது எரிந்துள்ளது என

கண்டறியப்பட்டால், உரிமதாரர் ஏழுநாட்களுக்குள் மின்னளவியை மாற்றவேண்டும். மின்னளவி இருப்பில் இல்லாதது, மின்சாரத்தை மீண்டும் வழங்குதலில் ஏற்படும் தாமதத்திற்கு காரணமாக இருத்தல் கூடாது.''

**6. 12-ஆம் ஒழுங்குமுறைவிதியில் உள்ஒழுங்குமுறைவிதி (V)-க்குப்பிறகு, கீழ்கண்ட உள்ஒழுங்குமுறைவிதி புகுத்தப்படும், அதாவது:-**

“(VI) மின்உரிமதாரர் துண்டிக்கப்பட்ட மின்விநியோகத்தை நிர்ணயிக்கப்பட்ட மின்சாரக் கட்டணம் அல்லது பிற பாக்கிகள் மற்றும் பிற கட்டணங்கள் பெறப்பட்டவுடன் துண்டிக்கப்பட்ட மின்னிணைப்பை உடனடியாக மறுஇணைப்பு செய்யவேண்டும் மற்றும் இந்த மறுஇணைப்புக்கான நேரம் எந்த சூழ்நிலையிலும் ஆறுமணி வேலை நேரத்திற்கு மிகையாமல் இருக்க வேண்டும்.''

**7. 21–ஆம் ஒழுங்குமுறைவிதியில் தற்போதைய அட்டவணை மற்றும் அது தொடர்பான உள்ளீடுகள், கீழ்கண்ட அட்டவணை மற்றும் அது தொடர்பான உள்ளீடுகளால் மாற்றியமைக்கப்படும், அதாவது:–**

**“21. ஈட்டுத் தொகை**

மின்உரிமதாரர் பரிந்துரைக்கப்பட்ட செயல்திறனை நிறைவேற்ற எதிர்பார்க்கப்படுகிறார். ஒரு உரிமதாரர் பல்வேறு மின்சேவைப்பகுதிகளில் குறிப்பிடப்பட்ட தரநிலைகளைப் பூர்த்தி செய்யத் தவறினால், மின்சாரச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, பாதிக்கப்பட்ட நுகர்வோருக்கு, உரிமதாரரிடமிருந்து இழப்பீடு பெற உரிமை உண்டு. செலுத்த வேண்டிய இழப்பீடு கீழே உள்ள அட்டவணையில் வரையருக்கப்பட்டுள்ளது, அதாவது:–

**அட்டவணை – I**

| வ. எண் | நிகழ்வுகள் | | நிர்ணயிக்கப்பட்ட நேரத்தைத்தாண்டிய தாமதத்திற்கு நுகர்வோருக்கு செலுத்த வேண்டியது |
|---|---|---|---|
| 1 | கேட்கப்படும் மனுவை நிறைவேற்றும் பொருட்டு உரிமதாரரின் கடமைகள்: | | ஒருநாள் தாமதத்திற்கு ரூ.200/– வீதம் அதிகபட்சமாக ரூ.2000/–. |
| | (அ) | புதுமின்னிணைப்பு | |
| | (ஆ) | கூடுதல் மின் சுமை | |
| | (இ) | தற்காலிக மின் இணைப்பு | |
| | (ஈ) | மின்னிணைப்பு இடமாற்றம் | |
| | (உ) | மின்னிணைப்பு பெயர் மாற்றம் | |
| | (ஊ) | மின் கட்டண வீதம் / மின்நுகர்வோர் விவரங்கள் மாற்றம் மற்றும் மின்தேவை குறைப்பு. | |
| | (எ) | மின்துண்டிப்பு | |
| 2 | பட்டியல் வழங்கல் (மின்வழங்கல் விதித்தொகுப்பில் குறிப்பிடப்பட்டுள்ளப்படி) | | ஒரு நாள் தாமதத்திற்கு ரூ.10/– வீதம் அதிகபட்சமாக ரூ.500/–. |
| 3 | மறு இணைப்பு | | ஒவ்வொரு மணிநேர தாமதத்திற்கு ரூ.10/– வீதம் அதிகபட்சமாக ரூ.500/–. |
| 4 | பட்டியல் தொடர்பான புகார்கள். | | குறிப்பிட்ட காலத்திற்குள் தீர்க்கப்படாவிடின் ரூ.300/–. |
| 5 | மின்னளவி மாற்றுதல் | | ஒரு நாள் தாமதத்திற்கு ரூ.200/– வீதம் அதிகபட்சமாக ரூ.2000/–. |
| 6 | மின்வழங்கல் தடை | | மின்விநியோகத்தை மீண்டும் வழங்குவதில் ஏற்படும் ஒவ்வொரு 6 மணிநேரம் அல்லது அதன் பகுதி தாமதத்திற்கு ரூ.100/– வீதம் அதிகபட்சமாக ரூ.2000/–. |
| 7 | நம்பகத் திறன் குறியீடுகளை கடை பிடிக்காமை: | | |
| | (அ) | ஒழுங்குமுறை விதி 25 ன் அட்டவணையில் நிர்ணயிக்கப்பட்ட ஒரு மின்நுகர்வோருக்கான SAIDI குறியீடு (நிமிடங்களில்) | SAIDI அளவை குறிப்பிட்ட வரம்பிற்கு மீறிய உயரழுத்த மின்கடத்தியில் இணைக்கப்பட்ட ஒரு மின்நுகர்வோருக்கு ஒரு நிமிடத்திற்கு 5 பைசா வீதம். |
| | (ஆ) | ஒழுங்குமுறைவிதி 25–ன் அட்டவணையில் நிர்ணயிக்கப்பட்ட ஒரு மின்நுகர்வோருக்கான மின்தடைக்கான SAIFI குறியீடு | SAIFI அளவை குறிப்பிட்ட வரம்பிற்கு மீறிய உயரழுத்த மின்கடத்தியில் இணைக்கப்பட்ட ஒரு மின்நுகர்வோருக்கு ஒரு மின்தடைக்கு 50 பைசா வீதம். |
| 8 | மின்னழுத்தம் தொடர்பான புகார்கள் | | குறிப்பிட்ட கால அளவிற்குள் ஆய்வு மேற்கொள்ளாமை அல்லது காரணங்கள் தெரிவிக்காமைக்கு ரூ.500/–. |

| வ. எண் | நிகழ்வுகள் | | நிர்ணயிக்கப்பட்ட நேரத்தைத்தாண்டிய தாமதத்திற்கு நுகர்வோருக்கு செலுத்த வேண்டியது |
|---|---|---|---|
| 9 | **மின்னழுத்தம் தொடர்பான புகார்களை சீரமைத்தல்** | | |
| | (அ) | மின்கட்டமைப்பு நீட்டிப்பு அல்லது மேம்பாட்டு பணி எதுவும் உள்ளடங்காதவை. | ஒருநாள் தாமதத்திற்கு ரூ.100/– வீதம் அதிகபட்சமாக ரூ.2000/–. |
| | (ஆ) | தாழ்வழுத்த மின்கட்டமைப்பு மேம்படுத்துதல் அல்லது மின்உபகரணங்கள் நிறுவுதலை உள்ளடக்கியவை. | ஒரு நாள் தாமதத்திற்கு ரூ.100/– வீதம் அதிகபட்சமாக ரூ.2000/–. |
| | (இ) | உயர்வழுத்த மின்கட்டமைப்பு மேம்படுத்துதலை உள்ளடக்கியவை. | ஒரு நாள் தாமதத்திற்கு ரூ.100/– வீதம் அதிகபட்சமாக ரூ.2000/–. |
| 10 | நுகர்வோர் முறையீடுகளுக்கு எடுக்கப்பட்ட பதில் நடவடிக்கை | | ஒவ்வொரு நாள் தாமதத்திற்கும் ரூ.50/– வீதம் அதிகப்பட்சமாக ரூ.500/–. |
| 11 | நுகர்வோர் சந்திப்பு ஏற்பாடுகளும் கடைப்பிடித்தலும் | | சந்திப்பை மேற்கொள்ள தவறினால் ரூ.100/–. |
| 12 | குறைதீர்ப்பைக் கையாளுதல் | | குறைதீர்ப்பைக் கையாளத் தவறினால் ரூ.100/–. |
| 13 | தற்காலிக மின்வழங்கல் காலம் முடிவடைந்த பிறகு தற்காலிக வழங்கல் தொடர்பான வைப்புத்தொகையைத் திரும்ப வழங்குதல் மற்றும் செயல்திறன் ஒழுங்கு முறைகளின் ஒழுங்குமுறை 6 இல் அல்லது தமிழ்நாடு மின்சாரம் வழங்கல் குறியீடு உள்ஒழுங்குமுறைவிதி 5 (6) (viii) இல் அல்லது தமிழ்நாடு மின்சார விநியோகக் குறியீட்டின் உள்ஒழுங்குமுறைவிதி 33 (5) இல் குறிப்பிடப்பட்டுள்ள காலத்திற்குள் இருப்பு வைப்புத்தொகையைத் திரும்ப வழங்குதல் | | ஒவ்வொரு வாரமும் அல்லது அதன் ஒரு பகுதி தாமதத்திற்கு ரூ.200/– வீதம், கட்டணம் திரும்ப வழங்கும் தேதிவரை ஆணையம் நிர்ணயித்துள்ள வட்டிவிகிதம் உட்பட, அதிகபட்சமாக ரூ.2000/– |
| 14 | சூரிய சக்தி ஒளி வோல்ட் (PV) மின்னுற்பத்தி அமைப்பு முறைகள் (GISS)–ஐ மின்கட்டமைப்புடன் இணைப்பதில் விண்ணப்பம் பெறுவதிலிருந்து மின்கட்டமைப்புடன் இணைக்கப்படும் வரையிலான பல்வேறு நடவடிக்கைகளுக்காக ஆணையத்தின் GISS ஒழுங்குமுறை விதியில் குறிப்பிடப்பட்டுள்ள காலக்கெடு. | | ஒவ்வொரு நாள் அல்லது அதன் பகுதி தாமதத்திற்கு ரூ.500/– வீதம் அதிகபட்சமாக ரூ.2000/–. |

**8. 22–ஆம் ஒழுங்குமுறைவிதி மற்றும் அது தொடர்பான உள்ளீடுகளுக்கு பதிலாக பின்வரும் ஒழுங்குமுறைவிதி மற்றும் அது தொடர்பான உள்ளீடுகள் மாற்றியமைக்கப்படும், அதாவது:–**

“ **22. ஈட்டுத் தொகை கட்டண வழிமுறை**

இழப்பீடுக்கான கோரிக்கை பின்வரும் முறைகளில் கையாளப்படும்:

I. தானியங்கி முறை – மின்பகிர்மான உரிமதாரரின் தொலைநிலையில் கண்காணிக்கப்படும் செயல்திறன் அளவுருவில் தவறு இருப்பதாக உறுதியாக நிரூபிக்கப்படும் பட்சத்தில், அத்தகைய அளவுருகளுக்கு நுகர்வோர் தானாகவே ஈடுசெய்யப்படுவர்.

II. கோரிக்கையின்பேரில்: உரிமதாரர் இழப்பீட்டுத் தொகையை அடுத்து வரும் பட்டியல் சுற்றுக் கால அளவிற்குள் வழங்கத் தவறினால் பாதிக்கப்பட்ட நுகர்வோர், உரிமதாரரின் நியமிக்கப்பட்ட பணியாளரிடம் முறையீடு செய்வதன் மூலமாகவும், அல்லது உரிமதாரரின் இணையதளத்தில் பதிவு செய்வதன் மூலமாகவும், செந்தரங்களைக் கடைபிடிக்காமைக்கான இழப்பீட்டைக் கோருவதற்கு உரிமை உடையவராவார்.

(1) இந்த ஒழுங்குமுறைவிதித் தொகுப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அளவுருக்களின்படி தங்கள் செயல்திறன் நிறைவேற்றப்பட்டுள்ளதா இல்லையா என்பதை உறுதி செய்து மின்நுகர்வோருக்கு இழப்பீட்டை தானியங்கி முறையில் அமல்படுத்தும் பொருட்டு மின்பகிர்மான உரிமதாரர் தொலைநிலை கண்காணிப்பு பொறிமுறையை நிறுவ வேண்டும்.

(2) மின்பகிர்மான உரிமதாரர், இந்த உள்ஒழுங்குமுறைவிதித் தொகுப்பு அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து ஆறு மாதங்களுக்குள், நுகர்வோர் நிகழ்நிலையில் பதிவுசெய்து இழப்பீட்டுத் தொகையைப் பெறக்கூடிய நிகழ்நிலை வசதியை உருவாக்க வேண்டும். இது தொடர்பான தகவல்களை வெகு ஜன ஊடகங்கள் (mass media), பட்டியல்கள், குறுஞ்செய்தி, மின்னஞ்சல்கள் மூலம் பரவலாக அறிவிக்கப்பட வேண்டும் அல்லது மின்உரிமதாரரின் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.

(3) மின்விநியோக உரிமதாரர் தொலைநிலையில் கண்காணிக்கக்கூடிய அளவுருக்களின் பட்டியலை படிப்படியாக அதிகரிக்கும் வகையில் கணினியை வடிவமைத்து, மேம்படுத்தி, பராமரிக்க வேண்டும்.

(4) இழப்பீட்டுக்கான அனைத்து நிகழ்வுகளிலும், அடுத்த இரண்டு பட்டியல் சுற்றுக்கால அளவிற்குள் தற்போதைய அல்லது எதிர்கால கட்டணங்களில் சரி செய்தல் மூலம் இழப்பீடு அளிக்கப்பட வேண்டும். இந்த இரண்டு பட்டியல்

காலவட்டத்தில் கணக்கிடப்பட்ட தொகையை விட இழப்பீட்டுத்தொகை அதிகமாக இருக்கும் பட்சத்தில், அடுத்து வரும் பட்டியலில் மீதமுள்ள தொகை சரி செய்யப்பட வேண்டும்.''

**9. 24–ஆம் ஒழுங்குமுறைவிதி மற்றும் அது தொடர்பான உள்ளீடுகளுக்கு பதிலாக பின்வரும் ஒழுங்குமுறைவிதி மற்றும் அது தொடர்பான உள்ளீடுகள் மாற்றியமைக்கப்படும், அதாவது:–**

**"24. புவியியல் தகவல் அமைப்பு (Geographic Information System-GIS) மூலம் செயல்திறனின் தரநிலை மற்றும் சொத்துக்கள் / நுகர்வோர் தகவல்கள் பதிவேற்றம் (mapping):**

(1) மின்பகிர்மான உரிமதாரர்கள், சட்டத்தின் 59–ஆம் பிரிவில் உள்ள துணைப் பிரிவு (1)ன்படி விதிக்கப்பட்டுள்ள படிவத்தில், அடையப்பெற்ற செயல்திறமட்டம், ஈட்டுத் தொகை செலுத்தப்பட்ட நேர்வுகளின் எண்ணிக்கை, செலுத்தப்பட்ட ஒட்டுமொத்த ஈட்டுத் தொகை ஆகியவை பற்றிய தகவலை ஆறு மாதத் மாதத்திற்கு ஒரு முறை ஆணையத்துக்கு அனுப்ப வேண்டும். சட்டத்தின் 59–ஆம் பிரிவில் உள்ள (2)–ஆம் துணைப்பிரிவின்படி அத்தகவலை உரிமதாரர் வெளியிடுவதற்கு ஆணையம் ஒப்புதல் அளிக்கும் வகையில் ஆணையத்தால் பரிந்துரைக்கப்பட்ட படிவத்தில் தகவல்கள் அளிக்கப்பட வேண்டும்.

(2) புதிய மின்இணைப்பு, மின்துண்டிப்பு, மறுமின்இணைப்பு, மின்இணைப்பை மாற்றுதல், பெயர் மற்றும் விவரங்களில் மாற்றம், மின்தேவை மாற்றம், மின்னளவி மாற்றுதல் போன்ற பொதுவான சேவைகளுக்காக 24x7 கட்டணமில்லா அழைப்பு மையத்தை நிறுவ உரிமதாரர் முயற்சிக்க வேண்டும். இருப்பினும் காகிதத்தொடர்பு, மின்னஞ்சல், கைபேசி, இணையதளம் போன்ற முறைகள் மூலம் சேவைகளை தொடர்ந்து வழங்கலாம். உரிமதாரர்கள் ஒரு பொதுவான வாடிக்கையாளர் தொடர்பு மேலாளர் (Consumer Relationship Manager-CRM) அமைப்பின் மூலம் அனைத்து சேவைகளையும் வழங்கி, பின்தளத்தில், கோரப்பட்ட, முடிக்கப்பட்ட மற்றும் நிலுவையில் உள்ள அனைத்து சேவைகளின் ஒருங்கிணைந்த பார்வையைப் பெற சிறந்த கண்காணிப்பு மற்றும் பகுப்பாய்வு முறையை ஏற்படுத்த வேண்டும்.

(3) விண்ணப்பத்தைப் பெறுதல், சேவையை நிறைவு செய்தல், விண்ணப்பத்தின் நிலையில் மாற்றம் போன்ற நிகழ்வுகளை, நுகர்வோர் மற்றும் அதிகாரிகளுக்கு, குறுஞ்செய்தி (SMS) மற்றும் மின்னஞ்சல் (email) விழிப்பூட்டல்கள் மூலம் அறிவிக்கும் வசதிகளை வாடிக்கையாளர் தொடர்பு மேலாளர் (CRM) கொண்டிருக்க வேண்டும். குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் சேவைகள் வழங்கப்படாவிட்டால், அச்சேவைகளின் நிலையை நிகழ்நிலையில் கண்காணிக்கவும், உயர்மட்டத்திற்கு தானாக தெரியப்படுத்துவதற்கான வசதிகளையும் வாடிக்கையாளர் தொடர்பு மேலாளர் (CRM) கொண்டிருக்க வேண்டும்.

(4) திட்டமிடப்பட்ட மின்வெட்டுகளின் விவரங்கள் மின்வெட்டு நிகழப்போகும் பகுதியினை குறிப்பிட்டு நுகர்வோருக்கு தெரிவிக்கப்பட வேண்டும். திட்டமிடப்படாத மின்தடை அல்லது மின்கோளாறு ஏற்பட்டால், உடனடியாக குறுஞ்செய்தி மூலமாகவோ அல்லது வேறு ஏதேனும் மின்னணு முறையில் மறுசீரமைப்பிற்கான மதிப்பிடப்பட்ட நேரத்துடன் நுகர்வோருக்கு தெரிவிக்கப்பட வேண்டும். இந்த தகவல் மின்பகிர்மான உரிமதாரரின் மேற்கண்ட அழைப்பு மையத்திலும் கிடைக்கும் படி செய்திட வேண்டும்.

(5) மின்பகிர்மான உரிமதாரர், அனைத்து விநியோகங்கள், பிரிவு அலுவலகங்கள், வட்டங்கள், கோட்டங்கள் மற்றும் மண்டலங்கள் ஆகியவற்றில், துணைநிலையம் வாரியாக, மின்வழித்தடம் வாரியாக மற்றும் விநியோக மின்மாற்றி வாரியாக, புவியியல் தகவல் அமைப்பு (GIS) அடிப்படையில் சொத்துக்கள் / நுகர்வோர் விவரங்கள் பதிவேற்றம் செய்து (Consumer mapping) பராமரிக்கப்பட வேண்டும். புவியியல் தகவல் அமைப்பு (GIS) மென்பொருளானது மின்கட்டண மென்பொருள் (Billing Software), ஆற்றல் தணிக்கை மென்பொருள் (Energy Audit Software) மற்றும் துணைநிலையம் தொடர்பான மென்பொருளுடன் (SS Monitoring Software) ஒருங்கிணைக்கப்பட்டு, அனைத்து தரவுத்தளங்களில் இருந்தும் ஒரே மாதிரியான மற்றும் பிழையற்ற தரவுகளை உருவாக்க வேண்டும். மேற்கூறப்பட்ட புவியியல் தகவல் அமைப்பு விவரங்கள் பதிவேற்றமானது திறமையான மின்பகிர்மானம் / மின்விநியோக பராமரிப்புகளுக்காகவும், மின்தடை மேலாண்மை பணிகளுக்காகவும் மற்றும் நுகர்வோர் / அதிகாரிகள் / இயக்குபவர்களுடன் தடையற்ற தொடர்பு மேற்கொள்வதற்காகவும், மேற்பார்வைக் கட்டுப்பாடு மற்றும் தரவு கையகப்படுத்தல் (SCADA) அமைப்பு, மின்ஊட்டி கண்காணிப்பு / விநியோக மேலாண்மை அமைப்பு (Distribution Management System - DMS), மின்தடை மேலாண்மை அமைப்பு, அழைப்பு மையம் (call centre) அமைப்பு மற்றும் பிற தொகுதிகளுடன் ஒருங்கிணைக்கப்பட்டு அதன் மூலம் செயலூக்கம் உடைய மின் வழங்கல் / விநியோக பராமரிப்பு, மின் செயலிழப்பு மேலாண்மை (Outage Management System) மற்றும் நுகர்வோர்கள். அலுவலர்கள், இயக்குபவர்களிடம் கோர்வையான தகவல் தொடர்பு போன்றவை ஏற்பட வழிவகை செய்தல் வேண்டும்.

(6) அனைத்து மரபு சொத்துக்களும் புவி–குறியீட்டுடன், விநியோக உரிமதாரரால் பராமரிக்கப்படும் நிலையான சொத்துப்பதிவேட்டில் முறையாக பதிவு செய்யப்பட வேண்டும்.''

**10. 25–ஆம் ஒழுங்குமுறைவிதி மற்றும் அது தொடர்பான உள்ளீடுகளுக்கு பதிலான பின்வரும் ஒழுங்குமுறைவிதி மற்றும் அது தொடர்பான உள்ளீடுகள் மாற்றியமைக்கப்படும், அதாவது:–**

**"25. சேவையின் நம்பகத்திறன்**

(1) பகிர்மான உரிமதாரர், அதன் விநியோக அமைப்பின் நம்பகத் திறனை கணக்கிட, ஒரு அறிக்கையிடல் காலத்தில், நீடித்த மின்தடைகளின் (5 நிமிடங்களுக்கு மேல்) எண்ணிக்கை மற்றும் கால அளவு ஆகியவற்றின் அடிப்படையில் பின்வரும் குறியீடுகளைப் பயன்படுத்த வேண்டும்:

i. 'அமைப்பின் சராசரி தடங்கல் நிகழ்வெண் குறியீடு' (System Average Interruption Frequency Index (SAIFI);

ii. 'அமைப்பின் சராசரித் தடங்கல் காலவரை குறியீடு' (System Average Interruption Duration Index (SAIDI);

(2) விநியோகப்பகுதியில் உள்ள அனைத்து 11கி.வோ, 22கி.வோ மற்றும் 33கி.வோ மின்னூட்டிகளுக்கும் (33/11 கி.வோ துணை மின்நிலையத்திற்கு மின்சாரம் வழங்க உட்செல்லும் 33 கி.வோ மின்னூட்டிகள் தவிர) ஒவ்வொரு மாதமும் விநியோக உரிமதாரர்களுக்கான குறியீடுகள் கணக்கிடப்படும், பின்னர் அந்த மாதத்தில் ஒவ்வொரு மின்னூட்டிகளில் ஏற்படும் மின்தடைகளின் எண்ணிக்கை மற்றும் கால அளவுகள் அனைத்தையும் தொகுக்க வேண்டும். குறியீடுகள் பின்வரும் சூத்திரத்திரத்தை பயன்படுத்தி கணக்கிடப்படும்:

$$SAIFI = \frac{\sum_{i=1}^{n} (N_i \times C_i)}{C_t}$$

$$SAIDI = \frac{\sum_{i=1}^{n} (T_i \times C_i)}{C_t}$$

இவற்றில்,

$N_i$= மாதத்திற்கான i–வது மின்கடத்தியில் நீடித்த (ஒவ்வொன்றும் 5 நிமிடங்களுக்கு மேல்) மின்தடைகளின் மொத்த எண்ணிக்கை;

$T_i$= மாதத்திற்கான மின்கடத்தியில் நீடித்த (5 நிமிடங்களுக்குமேல்) அனைத்து மின்தடைகளின் மொத்த கால அளவு, நிமிடங்களில்;

$C_i$= ஒவ்வொரு நீடித்த மின்தடைகளினால் பாதிக்கப்பட்ட i–வது மின்கடத்தியில் உள்ள நுகர்வோரின் எண்ணிக்கை;

$C_t$= மின்விநியோகப் பகுதியில் உள்ள 'n' மின்கடத்தியில் இணைக்கப்பட்டு மின்பகிர்மான உரிமதாரரால் மின்விநியோகம் வழங்கப்படும் மொத்த நுகர்வோர்களின் எண்ணிக்கை;

n= உரிமம் பெற்ற மின்விநியோகப்பகுதியில் உள்ள 11 கி.வோ, 22 கி.வோ. மற்றும் 33 கி.வோ. மின்கடத்திகளின் எண்ணிக்கை;

(3) மின்பகிர்மான உரிமதாரர் மாதாந்திர அடிப்படையில் கீழே உள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வரம்புகளுக்குள் குறியீடுகள் இருக்குமாறு பராமரிக்க வேண்டும்:

**அட்டவணை:**

**வெற்று நிலப்பரப்புக்கான நம்பகத் திறன் குறியீடுகளுக்கான வரம்புகள்**

| **நம்பகத் திறன் குறியீடுகள்** | **மாதாந்திர வரம்புகள்** | |
|---|---|---|
| | **நகர்ப்புறம்** | **கிராமப்புறம்** |
| SAIDI | 600 நிமிடம் ஒவ்வொரு நுகர்வோருக்கும் | 1200 நிமிடம் ஒவ்வொரு நுகர்வோருக்கும் |
| SAIFI | 15 மின்தடைகள் ஒவ்வொரு நுகர்வோருக்கும் | 25 மின்தடைகள் ஒவ்வொரு நுகர்வோருக்கும் |

(4) மின்கடத்திகள் கிராமம் மற்றும் நகர்ப்புறம் எனப் பிரிக்கப்பட்டு தனித்தனியாக குறியீடுகளின் மதிப்பை ஒவ்வொரு மாதமும் வட்டம் வாரியாக கணக்கிடப்பட வேண்டும்.

(i) நிர்ணயிக்கப்பட்ட நம்பகத் திறன் குறியீடுகளை கணக்கிடும் போது, பின்வரும் வகையான மின்தடைகள் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படாது:

(அ) ஐந்து நிமிடங்களுக்கும் குறைந்த கால அளவிலான கண நேர மின்தடை;

(ஆ) சூறாவளி, வெள்ளம், புயல்கள், போர், கலகம், உள்நாட்டுக்கலவரம், கலவரங்கள், மின்னல், நிலநடுக்கம், கதவடைப்பு, மின்கட்டமைப்பு செயலிழப்பு, உரிமதாரரின் நிறுவல்கள் மற்றும் செயல்பாடுகளை பாதிக்கும், தடுக்க முடியாத வலுக்கட்டாய (Force majeure) நிகழ்வுகளால் ஏற்படும் மின்தடங்கல்கள்;

(இ) தேசிய மின்சுமை பகுப்பு மையம் / மண்டல மின்சுமை பகுப்பு மையம் / மாநில மின்சுமை பகுப்பு மையம் ஆகியவற்றின் செயல்முறை குறைபாடுகளினால் ஏற்படும் மின்தடங்கல்;

(ii) நிர்ணயிக்கப்பட்ட நம்பகத் திறன் குறியீடுகளை கணக்கிடும் போது, கால வரையீட்டு அல்லது திட்டமிடப்பட்ட மின்தடங்கலினால் ஏற்படும் மின்தடைகள் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்.

(iii) மின்பகிர்மான உரிமதாரர் நம்பகத் திறன் குறியீடுகளின் தரவைகளை முடிந்தவரை மனித தலையீடுகள் எதுவும் இல்லாத வண்ணம், நேரடியாக மின்விநியோகம் / மின்கடத்தி கண்காணிப்பு அமைப்பு / மின்தடை மேலாண்மை அமைப்பிலிருந்து பெறப்பட வேண்டும்.

(iv) மின்பகிர்மான உரிமதாரர் ஒவ்வொரு வட்டத்திற்கும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள நம்பகத் திறன் குறியீடுகளின் தரவை மாதாந்திர அடிப்படையில் பராமரிக்க வேண்டும்.

(v) மின்பகிர்மான உரிமதாரர், ஒவ்வொரு மாத இறுதியிலும், நம்பகத் திறன் குறியீடுகள் குறித்த மாதாந்திர தகவல்களை மின்பகிர்மான உரிமதாரரின் இணையதளத்தில் ஏற்றம் செய்து, அத்தகைய அறிக்கையை காலாண்டுக்கு ஒரு முறை ஆணையத்திடம் சமர்ப்பிக்க வேண்டும்.

(vi) தரவைச் சமர்ப்பிப்பதற்கான படிவம் ஆணையத்தால் நிர்ணயிக்கப்பட்ட வடிவில் இருக்க வேண்டும்.

(vii) இந்த தரவுப் படிவம் கிராமப்புறம் / நகர்ப்புறங்கள் / வட்டம் வாரியாக தனித்தனியாக நிரப்பப்பட வேண்டும்.

(viii) உரிமம்தாரர் அதிகப்படியான விவசாய மின்சுமைகள் உள்ள மின்கடத்திகளில் இந்த குறியீடுகளின் மதிப்பை தனியாக கணக்கிட வேண்டும். குறியீடுகளைக் கணக்கிடுவதற்கான முறையானது மற்ற மின்கடத்திகளின் கணக்கிடும் முறையின் படியே அமையும்.

(5) மின்பகிர்மான உரிமதாரர், அனைத்து நுகர்வோருக்கும் திட்டமிடப்பட்ட பராமரிப்பு மற்றும் எதிர்பாராத மின்தடைகளை தவிர்த்து 24x7 மின்சாரம் வழங்க வேண்டும். இருப்பினும், மின்பகிர்மான உரிமதாரர், மின்விநியோகம் மற்றும் மின்தேவை நிலையை அவ்வப்போது மதிப்பாய்வு செய்ய வேண்டும். விவசாயம் போன்ற சிலவகை நுகர்வோருக்கு, மின்கட்டமைப்பு கட்டுப்பாடுகள் காரணமாக, குறைந்த நேர மின்விநியோகம் செய்ய நேரிடும் போது, தினசரி பத்திரிக்கை, மின்னணு ஊடகம், குறுஞ்செய்தி போன்றவற்றின் மூலம் பாதிக்கப்படும் அனைத்து நுகர்வோருக்கும் பரவலான தகவலை முன்கூட்டியே தெரிவிக்க வேண்டும்.

(6) மின்பகிர்மான உரிமதாரர் மின்தடை மற்றும் மீண்டும் மின்வழங்கலை கண்காணிப்பதற்கு, முடிந்தவரை தானியங்கி கருவிகளைக் கொண்டு தானாக இயங்கக்கூடிய ஒரு பொறியமைப்பை ஏற்படுத்த வேண்டும்.

(7) மின்பகிர்மான உரிமதாரர், வட்டவாரியான நுகர்வோரின் நம்பகத் திறன் குறியீடுகளை மதிப்பாய்வு செய்வதற்கும் கண்காணிப்பதற்கும், மேற்கூறியவற்றுடன் தொடர்புடைய துணைப் பொறிமுறையை உருவாக்க வேண்டும்.''

**11.** கூறப்பட்ட ஒழுங்குமுறை விதிகளின் இணைப்பில், «இணைப்பு» என்ற தலைப்பு "பின்னிணைப்பு" என படிக்கப்பட வேண்டும்.

(தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி)

சென்னை-600 032,
2024 பிப்ரவரி 7.

**முனைவர். சி.வீரமணி,**
*செயலாளர்.*
*தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்.*

**விளக்க அறிக்கை**

இந்திய மின்சாரத் துறை அமைச்சகம், மின்சார (நுகர்வோரின் உரிமைகள்) விதிகள், 2020–யை வெளியிட்டதுடன் அதன் தொடர்ச்சியாக திருத்தங்களையும் வெளியிட்டுள்ளது. அத்தகைய விதிகளில் உள்ள வரைமுறைகளை கருத்தில் கொண்டு தற்போதுள்ள தமிழ்நாடு மின்சார பகிர்மானச் செயல்திறச் செந்தரங்களுக்கான ஒழுங்குமுறை விதிகளில் தேவையான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது.

புதிய மின்னிணைப்புகள் வழங்குவதற்கு கட்டமைப்பு விரிவாக்கத்திற்கான தேவை ஏற்படாத பட்சத்தில், மின்னிணைப்பு வழங்குவதற்கான கால அளவு ஏழு நாட்களாக நிர்ணயிக்கப்பட வேண்டியுள்ளது.

மின்னிணைப்பு வழங்குவதற்கு துணை மின் நிலையம் அமைக்கப்பட வேண்டிய பட்சத்தில், அதற்குண்டான கால அளவை மறு பரிசீலனை செய்து மறு நிர்ணயம் செய்யப்பட வேண்டியுள்ளது.

தற்காலிக மின் விநியோகம் வழங்குவதற்கான நடைமுறையை எளிமைப்படுத்தவும், விரைவுப்படுத்தவும் வேண்டியுள்ளது.

மின் தேவையை குறைப்பதற்கான காலக்கெடு நிர்ணயிக்கப்பட வேண்டியுள்ளது.

பழுதடைந்த மின்னளவியை மாற்றுவதற்கான கால வரம்பை தற்போதுள்ள வரம்பிலிருந்து குறைக்க வேண்டியுள்ளது.

மின்கட்டமைப்புடன் இணைக்கப்படக் கூடிய சூரிய சக்தி ஒளி வோல்ட் (PV) மின்னுற்பத்தி அமைப்பு முறைகளில் (GISS) குறிப்பிடப்பட்டுள்ள கால வரம்பு மற்றும் தானாக மற்றும் கோரல் மூலம் கேட்கப்படும் இழப்பீட்டிற்காக வகுக்கப்பட வேண்டிய வழிமுறைகள் மற்றும் இழப்பீடு அளிக்கும் நடைமுறையை தமிழ்நாடு மின்சார பகிர்மானச் செயல்திறச் செந்தரங்களுக்கான ஒழுங்குமுறை விதிகள், 2004–ல் (DSOP) சேர்க்கப்பட வேண்டியுள்ளது. அத்தகைய இழப்பீட்டின் அளவுகளை பொதுமக்களின் கருத்துக்களின் அடிப்படையில் திருத்தப்பட வேண்டியுள்ளது.

வாடிக்கையாளர் சேவையை மேம்படுத்த, அழைப்பு மையம் மற்றும் வாடிக்கையாளர் தொடர்பு மேலாளர் அமைப்பு முறையை ஏற்படுத்தப்பட வேண்டியுள்ளது.

ஒழுங்குமுறையாளர்களின் மன்றத்தின் மாதிரி விதிமுறைகளின் அடிப்படையிலும் மற்றும் மத்திய அரசின் மின்துறை அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட 2021–22 நிதியாண்டுக்கான மின்பகிர்மான கழகங்களின் நுகர்வோர் சேவை மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள குறியீடுகளின் தேசிய சராசரியின் அடிப்படையிலும், சேவை நம்பகத் திறன் குறியீடுகள் நிர்ணயிக்கப்பட வேண்டியுள்ளது. மேலும் மின்நுகர்வோருக்கு சிறந்த சேவை மற்றும் தரமான மின்விநியோகத்தை உறுதிசெய்யும் பொருட்டு, திறம்பட செயல்படுத்துவதற்கான குறியீடுகளின் கணக்கீட்டு முறை நிர்ணயிக்க / திருத்தப்பட வேண்டியுள்ளது.

தானியங்கும் மின் பகிர்மான மேலாண்மை அமைப்பு, மின் தடங்கல் மேலாண்மை அமைப்பு மற்றும் ஒழுங்கு முறை விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள பிற நுகர்வோர் தொடர்பான சேவைகளை திறம்பட நிறைவேற்ற, சொத்துக்கள் மற்றும் மின் நுகர்வோர் பற்றிய தகவல்களை புவியியல் தகவல் அமைப்பு (Geographic Information System – GIS) மூலம் வரைபடமாக்கலின் தேவையை ஒழுங்குமுறை விதியில் கட்டாயமாக்கப்பட வேண்டியுள்ளது.

இந்த திருத்தப்பட்ட ஒழுங்குமுறை விதிகள் மேலேயுள்ள நோக்கங்களை நிறைவேற்றுகிறது.

(தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி)

சென்னை-600 032,
2024 பிப்ரவரி 7.

**முனைவர். சி. வீரமணி,**
*செயலாளர்.*
*தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்.*

**இணைப்பு**

**தமிழ்நாடு மின்சாரப் பகிர்மானச் செயல்திறச் செந்தரங்களுக்கான ஒழுங்குமுறைவிதிகள், 2004**

| *வ. எண்* | *இருந்து வரும் வகை முறை* | *திருத்தம் செய்யப்பட்ட வகைமுறை* |
|---|---|---|
| 1.<br>(a)<br>(b) | **2. வரையறைகள்:**<br>**இந்த ஒழுங்குமுறைவிதிகளில், சூழல் இல்லாவிட்டாலும் தேவைப்படின்:-**<br>(i) ‘‘சட்டம்‘‘ என்பது ‘மின்சாரச் சட்டம், 2003’ (2003–ல் 36–வது சட்டம்) என்பதைக் குறிக்கும்.<br>(ii) ‘‘ஆணையம்’’ என்பது ‘தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்’ என்பதைக் குறிக்கும்.<br>(iii) இவ்வொழுங்குமுறை விதிகளில் பயன்படுத்தப்பட்டு ஆனால் இவ்வொழுங்குமுறை விதிகளிலோ அல்லது இச்சட்டத்திலோ வரையறை செய்யப்படாத சொற்கள், பொறியியல் மற்றும் வணிகவியல் வட்டங்களில் வழங்கும் பொருளையேக் குறிக்கும். | **2. வரையறைகள்:**<br>**இந்த ஒழுங்குமுறைவிதிகளில், சூழல் இல்லாவிட்டாலும் தேவைப்படின்:-**<br>(i) ‘‘சட்டம்‘‘’ என்பது ‘மின்சாரச் சட்டம், 2003’ (2003–ல் 36–வது சட்டம்) என்பதைக் குறிக்கும்.<br>(ii) ‘‘ஆணையம்’’ என்பது ‘தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்’ என்பதைக் குறிக்கும்.<br>(iii) ‘அமைப்பு சராசரித் தடங்கல் காலவரை குறியீடு’ (SAIDI) என்பது அறிக்கையிடல் காலத்தில் ஒரு மின்நுகர்வோருக்கு ஏற்படும் நீடித்த மின்தடைகளின் சராசரி கால அளவைக் குறிக்கிறது.<br>இது அனைத்து நுகர்வோரின் நீடித்த மின்தடை கால அளவின் (நிமிடங்களில்) கூட்டுத்தொகையை மொத்த நுகர்வோரின் எண்ணிக்கையால் வகுப்பதன் மூலம் தீர்மானிக்கப்படுகிறது.<br>(iv) ‘அமைப்பின் சராசரி தடங்கல் நிகழ்வெண் குறியீடு’ (SAIFI) என்பது அறிக்கையிடல் காலத்தில் ஒரு மின்நுகர்வோருக்கு ஏற்படும் நீடித்த மின்தடைகளின் சராசரி நிகழ்வினைக் குறிக்கிறது. இது அனைத்து நுகர்வோர் நீடித்த மின்தடை நிகழ்வுகளின் கூட்டுத்தொகையை மொத்த நுகர்வோரின் எண்ணிக்கையால் வகுப்பதன் மூலம் தீர்மானிக்கப்படுகிறது.<br>(v) இவ்வொழுங்குமுறை விதிகளில் பயன்படுத்தப்பட்டு ஆனால் இவ்வொழுங்குமுறை விதிகளிலோ அல்லது இச்சட்டத்திலோ வரையறை செய்யப்படாத சொற்கள், பொறியியல் மற்றும் வணிகவியல் வட்டங்களில் வழங்கும் பொருளையேக் குறிக்கும். |

| வ. எண் | இருந்து வரும் வகை முறை | திருத்தம் செய்யப்பட்ட வகைமுறை |
|---|---|---|
| 2. | 4. கோரும்போது மின் வழங்கல் நீட்டிப்பதற்கான உரிமதாரரின் கடமைகள்<br><br>சட்டத்தின் 43–ஆம் சட்டப்பிரிவு மின் வழங்கல் தரும் கடமை பற்றிப் பின்வருமாறு கூறுகிறது.<br><br>43. (1) ஒவ்வொரு பகிர்மான உரிமதாரும் ஏதாவதொரு இருப்பிடத்துக்கான சொந்தக்காரரோ அல்லது அதற்குப் பொறுப்பேற்றுள்ளவரோ விண்ணப்பம் தந்து அவ்விருப்பிடத்துக்கு மின் வழங்கல் வேண்டினால் அத்தகைய இருப்பிடத்துக்கு அத்தகைய மின் வழங்கல் வேண்டி வந்த விண்ணப்பத்தைப் பெற்ற ஒரு மாதத்துக்குள் மின் வழங்கலைத்தரவேண்டும்.<br><br>அத்தகைய மின்வழங்கலைத் தர, புதிய பகிர்மான வாயில் நீட்டிப்போ, புதிய துணை மின் நிலைய இயக்கி வைப்போ தேவைப்பட்டால், பகிர்மான உரிமதாரர் அத்தகைய இருப்பிடத்துக்கு, உரிய நீட்டிப்போ அல்லது இயக்கி வைப்போ முடிந்ததுமோ, அல்லது தக்க ஆணையம் குறிப்பிடும் காலத்துக்குள்ளோ, மின் வழங்கலைத் தரவேண்டும்.<br><br>மேலும் அவ்விருப்பிடம், மின்சார வழங்கல் ஏதும் இல்லாத கிராமமாகவோ, சிற்றூராகவோ, வட்டாரமாகவோ, அமைந்தால், தக்க ஆணையம் செப்பியபடி அவ்வூர் அல்லது அச்சிற்றூர் அல்லது அவ்வட்டாரத்துக்கு மின்சாரமூட்டும் ஏற்பாடுகள் செய்ய தேவையெனக் கருதும் காலத்துக்குள் அத்தகைய இருப்பிடத்துக்கு மின் வழங்கலை நீட்டிக்கலாம்.<br><br>(2) துணைப்பிரிவு (1) ல் குறிப்பிட்ட அத்தகைய இருப்பிடத்துக்கு மின் வழங்கலைத் தர, மின் எந்திரம் வைத்தலோ, மின்தொடர் நீட்டித்தலோ தேவைப்பட்டால் அத்தகைய ஏற்பாட்டைச் செய்ய வேண்டியது ஒவ்வொரு பகிர்மான உரிமதாரரின் கடமையாகும்.<br><br>இருந்தாலும், தக்க ஆணையத்தால் குறிப்பிடப்பட்ட உரியவிலையை அந்நுகர்வோர் உரிமதாரருக்குச் செலுத்த இசைந்தாலொழிய அப்படி எவரும் எந்த இருப்பிடத்துக்கும் உரிமதாரரிடமிருந்து மின்சாரம் பெறவோ, பெற்றுக் கொண்டிருப்பதைத் தொடர்ந்து பெறவோ கோர உரிமையுடையவராகார் என்பதும் மேலும் விதிக்கப்படுகிறது.<br><br>(3) துணைப்பிரிவு (1) இல் உள்ளபடி குறிப்பிட்ட காலத்திற்குள் பகிர்மான உரிமதாரர் மின்சாரம் வழங்கத் தவறினால், அப்படி வழங்கத் தவறும் ஒவ்வொரு நாளுக்கும் தொடர்ந்து ரூ.1,000/– அளவு வரை போடக்கூடிய தண்டத் தொகை விதிக்கப்பட்டால் உரிமதாரர் அதைக் கட்ட உரியவராவார். | **4. மின்வழங்கல் கோரிக்கையின் போது உரிமதாரரின் கடமைகள்:**<br><br>**மின்வழங்கலுக்கான உரிமதாரரின் கடமைகள் கீழ்வருமாறு:**<br><br>(1) ஒவ்வொரு பகிர்மான உரிமதாரரும் ஏந்தவொரு இருப்பிடத்துக்கான சொந்தக்காரரோ அல்லது அதில் குடியிருப்பவரோ விண்ணப்பம் அளித்து அவ்விருப்பிடத்திற்கு மின்வழங்கல் வேண்டினால் அத்தகைய இருப்பிடத்திற்கு மின்வழங்கல் வேண்டி வந்த விண்ணப்பத்தைப் பெற்ற ஒரு வார (ஏழு பணி நாட்கள்) காலத்திற்குள் மின்வழங்கல் தர வேண்டும்.<br><br>அவ்வாறான மின்வழங்கலை தரும்பொருட்டு, புதிய பகிர்மான மின்வாயில் நீட்டிப்போ, புதியதுணைமின் நிலைய இயக்கிவைப்போ தேவைப்பட்டால், பகிர்மான உரிமதாரர் அத்தகைய இருப்பிடத்திற்கு, உரிய நீட்டிப்போ அல்லது இயக்கிவைப்போ முடிந்த உடனுடனுமோ, அல்லது இந்த ஒழுங்குமுறை விதித்தொகுப்பில் குறிப்பிடப்பட்டுள்ள காலத்திற்குள்ளோ, மின்வழங்கல் தர வேண்டும்.<br><br>மேலும் அவ்விருப்பிடம், மின்சார வழங்கல் ஏதும் இல்லாத கிராமமாகவோ, சிற்றூராகவோ, வட்டாரமாகவோ இருந்தால், ஆணையம் செப்பியபடி அவ்வூர் அல்லது அச்சிற்றூர் அல்லது அவ்வட்டாரத்திற்கு மின்மயமாக்கும் ஏற்பாடுகள் செய்ய வேண்டிய தேவைகளை கருத்தில் கொண்டு மேற்சொன்ன மின் வழங்கும் காலத்தை நீட்டிக்கலாம்.<br><br>**விளக்கம்:**<br><br>இந்த உள்ஒழுங்குமுறைவிதியின் நோக்கங்களின் படி 'விண்ணப்பம்' என்பது தேவையான கட்டணங்கள் மற்றும் பிற இணக்கங்களைக் காட்டும் ஆவணங்களுடன் பொருத்தமான படிவத்தில் அனைத்து வகையிலும் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பமாகும்.<br><br>(2) மின்வழங்கல் தேவைப்படும் இருப்பிடத்திற்கு மின்வழங்கலை தர, மின்கலன் வைத்தலோ, மின்தொடர் நீட்டித்தலோ தேவைப்பட்டால் அத்தகைய ஏற்பாட்டைச் செய்ய வேண்டியது ஒவ்வொரு மின்பகிர்மான உரிமதாரரின் கடமையாகும்.<br><br>இருந்தபோதிலும், ஆணையத்தால் அவ்வப்போது குறிப்பிடப்பட்ட உரிய விலையை அல்லது கட்டணத்தை அந்நுகர்வோர் உரிமதாரருக்குச் செலுத்த இசைந்தாலொழிய எவரும் சொந்த இடத்திலோ அல்லது குடியிருக்கும் இடத்திலோ உரிமதாரரிடமிருந்து மின்சாரம் பெறுவதற்கோ, பெற்றுக் கொண்டிருப்பதைத் தொடர்வதற்கோ உரிமை இல்லை. |

| வ. எண் | இருந்து வரும் வகை முறை | திருத்தம் செய்யப்பட்ட வகைமுறை |
|---|---|---|

**இருந்து வரும் வகை முறை:**

நீட்டிப்பு அல்லது மேம்பாட்டுப் பணியேதும் தேவைப்படாத நிலையில் உரிமதாரர்கள் மின் வழங்கலை ஒரு வார காலத்துக்குள் தர முயன்றிட வேண்டும். ஆனால் எக்காரணம் கொண்டும் 30 நாட்களுக்கு மேல் காலத்தை நீட்டிக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

பகிர்மானத் தொடர்கள் நீட்டிக்க வேண்டிய நிலையில் உரிமதாரர்கள் மின் வழங்கலைத் தர, பின்வரும் கால அட்டவணைகளைக் கடைபிடிக்க வேண்டும்.

**அட்டவணை—I**

| வகை | தாழ்அழுத்தத்திற்கான |
|---|---|
| (a) நீட்டிப்பு அல்லது மேம்பட்டு பணி எதனையும் உள்ளடக்கியிராதவை | விரும்பத்தக்கநிலையில் ஒருவாரத்திற்குள். ஆனால், 30 நாட்களுக்கு மேற்படாமல் |
| (b) மின்பகிர்மான மின் மாற்றிகள் இல்லாமல் நீட்டிப்பு மற்றும் மேம்பாடு உள்ளடக்கியவை. | 60 நாட்கள் |
| (c) மின்பகிர்மான மின் மாற்றிகளுடன் நீட்டிப்பு மற்றும் மேம்பாடு உள்ளடக்கியவை. | 90 நாட்கள் |

**திருத்தம் செய்யப்பட்ட வகைமுறை:**

(3) ஒரு மின்பகிர்மான உரிமதாரர் குறிப்பிட்ட காலத்திற்குள் மின்சாரம் வழங்கத் தவறினால், இந்த ஒழுங்குமுறையின் 21–வது விதியில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு இணங்க விண்ணப்பதாரருக்கு உரியத்தொகை செலுத்த வேண்டும்.

எனினும் தனது பெயரிலுள்ள வேறு ஏதேனும் மின்இணைப்பு தொடர்பாக உள்ள நிலுவைத்தொகையை விண்ணப்பதாரர் செலுத்தத் தவறிய நிலையில் மின்பகிர்மான உரிமதாரர் அவ்விண்ணப்பதாரருக்கு மின்சாரம் வழங்க மறுப்பார்.

(4) உரிமதாரர்கள் மின்வழங்கலுக்கு, பின்வரும் கால அட்டவணைகளைக் கடைபிடிக்க வேண்டும்:

**அட்டவணை I**

| **வகையினம்** | **தாழ் அழுத்தத்திற்கான கால அட்டவணை** |
|---|---|
| (அ) நீட்டிப்பு அல்லது மேம்பாட்டுப் பணி எதுவும் உள்ளடங்காதவை | கூடிய மட்டும் 3 நாட்களுக்குள், ஆனால் 7 நாட்களுக்கு மிகாமல் |
| (ஆ) மின்பகிர்மான மின் மாற்றிகள் இல்லாமல் நீட்டிப்பு மற்றும் மேம்பாடு உள்ளடக்கியவை. | 60 நாட்கள் |
| (இ) மின்பகிர்மான மின் மாற்றிகளுடன் நீட்டிப்பு மற்றும் மேம்பாடு உள்ளடக்கியவை. | 90 நாட்கள் |

**இருந்து வரும் வகை முறை:**

**அட்டவணை—II**

| | வகை | உயர் அழுத்தம் / அதி உயர் அழுத்தத்திற்கான கால அட்டவணை | |
|---|---|---|---|
| | | உ.அ. | அ.உ.அ |
| (a) | நீட்டிப்பு மற்றும் மேம்பாடு உள்ளடக்கியது | 60 நாட்கள் | 150 நாட்கள் |
| (b) | திறன் மின்மாற்றியை அதிகப்படுத்துதல் / கூடுதல் திறன் மாற்றி உள்ளடக்கியது | 120 நாட்கள் | 180 நாட்கள் |
| (c) | புதிய துணை மின்நிலையங்களைத் தொடங்குதல் உள்ளடக்கியது | 180 நாட்கள் | 270 நாட்கள் |

**திருத்தம் செய்யப்பட்ட வகைமுறை:**

**அட்டவணை II**

| **வகையினம்** | **உயர் அழுத்தம் / அதி உயர் அழுத்தத்திற்கான கால அட்டவணை** | |
|---|---|---|
| | **உயர் அழுத்தம்** | **அதி உயர் அழுத்தம்** |
| (அ) நீட்டிப்பு மற்றும் மேம்பாடு உள்ளடக்கியவை | 60 நாட்கள் | 150 நாட்கள் |
| (ஆ) துணை மின் நிலைய மின்மாற்றியின் திறனை மேம்படுத்துதல் / கூடுதல் மின்மாற்றியை அமைப்பதை உள்ளடக்கியவை | 120 நாட்கள் | 180 நாட்கள் |
| (இ) புதிய துணை மின்நிலையங்களை இயக்குவித்தலை உள்ளடக்கியவை | 270 நாட்கள் | 365 நாட்கள் |

| *வ. எண்* | *இருந்து வரும் வகை முறை* | *திருத்தம் செய்யப்பட்ட வகைமுறை* |
|---|---|---|
| | (i) உரிமம்தாரர், உரிய ஒப்புகையுடன் செலுத்தப்பட வேண்டிய வகுத்துரைக்கப்பட்ட கட்டணங்களைச்சுட்டிக்காட்டும் ஆலோசனைச் சீட்டு / அறிவிப்புக் கடிதத்தை வழங்குதல் வேண்டும். | (i) மின்பகிர்மான உரிமதாரர், செலுத்தப்பட வேண்டிய அனைத்து கட்டணங்களுக்கும், வகுத்துரைக்கப்பட்ட கட்டணங்கள் மற்றும் கட்டணம் செலுத்தும் கடைசி தேதியை சுட்டிக்காட்டும் கட்டண சீட்டு / அறிவிப்புக் கடிதத்தை மின்நுகர்வோருக்கு வழங்குதல் வேண்டும்.<br>நேரில் பெறப்பட்ட விண்ணப்பங்களுக்கு, முறையான ஒப்புகையுடன் கட்டண சீட்டு / அறிவிப்பு வழங்கப்பட வேண்டும். இணைய வழி விண்ணப்பங்களுக்கு, கணினி மூலம் பெறப்பட்ட கட்டண ஓலை / ஒப்புகைச்சீட்டு போதுமானதாகும். |
| | (ii) நுகர்வோர், மேலேயுள்ள கட்டணங்களைக் குறிப்பிட்ட காலத்திற்குள் செலுத்துதல் வேண்டும், ஆனால் ஆலோசனைச் சீட்டு அறிவிப்பு கடிதம் பெற்ற நாளிலிருந்து பதினைந்து நாட்களுக்கு மேற்படுதல் ஆகாது. | (ii) நுகர்வோர், மேலேயுள்ள கட்டணங்களைக் குறிப்பிட்ட காலத்திற்குள் செலுத்துதல் வேண்டும், ஆனால் கட்டண சீட்டு / அறிவிப்பு கடிதம் பெற்ற நாளிலிருந்து பதினைந்து நாட்களுக்கு மேற்படுதல் கூடாது. |
| | (iii) விதிவிலக்கான / தகுதியுள்ள நேர்வுகளில், முறையே, உயர்அழுத்த / அதிஉயர் அழுத்த / தாழ் அழுத்த மின்னிணைப்புகளுக்காக வகுத்துரைக்கப்பட்ட பதினைந்து நாட்களுக்கு அப்பால் நுகர்வோரால் செலுத்தப்படும் கட்டணங்களுக்காக அந்தத் தலைமைப் பொறியாளர் மற்றும் கண்காணிப்புப் பொறியாளர் அல்லது உரிமம்தாரரால் இந்த நோக்கத்திற்காக நியமனஞ் செய்யப்பட்ட நபரால் அனுமதி வழங்கப்படலாம். | (iii) சில விதிவிலக்கான / தகுதியான சந்தர்ப்பங்களில் முறையே, உயர் அழுத்த / அதி உயர் அழுத்த / தாழ்வழுத்த மின்னிணைப்புகளுக்காக வகுத்துரைக்கப்பட்ட பதினைந்து நாட்களுக்கு அப்பால் கட்டணங்களை செலுத்துவதற்கு அந்தந்தத் தலைமைப் பொறியாளர் மற்றும் கண்காணிப்புப் பொறியாளர் அல்லது உரிமதாரரால் இந்த நோக்கத்திற்காக நியமனம் செய்யப்பட்ட நபரால் அந்நுகர்வோருக்கு அனுமதி வழங்கப்படலாம். |
| | (iv) கோரிக்கை அறிவிப்பு பெற்ற தேதியிலிருந்து வகுத்துரைக்கப்பட்ட கட்டணங்களைச் செலுத்துவதற்கு நுகர்வோரால் எடுத்துக் கொள்ளப்பட்ட காலமானது, மேலேயுள்ள கால அட்டவணையில் உள்ளடங்குதல் ஆகாது. | (iv) நிர்ணயிக்கப்பட்ட கட்டணங்களை செலுத்துவதற்கான கோரிக்கை அறிவிப்பு பெறப்பட்ட நாளிலிருந்து கட்டணம் செலுத்துவதற்காக விண்ணப்பதாரர் எடுத்துக் கொண்ட கால அளவு அல்லது உரிமதாரரால் தெரிவிக்கப்பட்ட குறைபாடுகளை சரிசெய்வதற்கு அல்லது குறிப்பிட்ட ஆவணங்களைச் சமர்ப்பிப்பதற்கு அல்லது விண்ணபதாரரால் நிறைவேற்றப்பட வேண்டிய மற்ற காரணங்களுக்காக எடுத்துக் கொண்ட கால அளவு மற்றும் கட்டுப்படுத்த முடியாத / விலக்க முடியாத இடையூறு காரணங்களினால் அல்லது மின்வழங்குதலின் தாமதத்திற்கு உரிமதாரரின் பொறுப்பிற்கு உட்படாத காரணங்களால் ஏற்படும் கால அளவு போன்றவை மேற்கண்ட கால அட்டவணையில் உள்ளடக்கப்படாது.<br>(v) இந்த கால அட்டவணை, கூடுதல் சுமைகளுக்கும் பொருந்தத்தக்கதாகும்" |
| | (v) கால அட்டவணையானது, கூடுதல் சுமைகளுக்கும் கூட பொருந்தத்தக்கதாகும். | |
| 3. | **6. தற்காலிக மின் வழங்கல்**<br>விழாக்களுக்கு ஒளியூட்டவோ, உறைவதற்கான வீடுகளுக்கோ, அடுக்கு வீடுகளுக்கோ, வணிக வளாகங்களுக்கோ, தொழிலக இருப்பிடங்களுக்கோ தேவைப்படும் கட்டுமானப் பணிகள் செய்யவோ மற்றும் பிறவற்றுக்காகவோ அத்தகைய விருப்பம் உள்ள நுகர்வோர்கள் தற்காலிக மின்னிணைப்புகள் தேவையெனக் கோரினால் தரப்படலாம். அத்தகைய தற்காலிக மின்னிணைப்புகளையும் புதுமின்னிணைப்பு மற்றும் கூடுதல் சுமை வழங்கக் குறிப்பிடப்பட்டுள்ள அதே கால தவணை அட்டவணையின்படி தர வேண்டும். | **6. தற்காலிக மின் வழங்கல்:**<br>(1) நுகர்வோர்களுக்கு, குடியிருப்பு வீடுகள், அடுக்குமாடி கட்டிடங்கள், வணிக வளாகங்கள், தொழிலக இருப்பிடங்கள் போன்றவற்றின் கட்டுமானப் பணிகளுக்கு, கட்டுமான பணிகள் நிறைவடைந்தவுடன் நிரந்தர மின்னிணைப்பாக மாற்றம் செய்யப்படகூடிய தற்காலிக மின் இணைப்பு தேவைப்படலாம்.<br>(2) சர்க்கஸ், பாலம் கட்டுதல், தற்காலிக நிகழ்வின் போது தேவைப்படும் ஒளி அமைப்பு போன்ற முற்றிலும் தற்காலிக நோக்கங்களுக்காக மட்டும் கூட தற்காலிக மின்னிணைப்பு தேவைப்படலாம். |

| வ. எண் | *இருந்து வரும் வகை முறை* | *திருத்தம் செய்யப்பட்ட வகைமுறை* |
|---|---|---|
| | தற்காலிக மின்னிணைப்பு வழங்கல் காலம் முடிந்து அம்மின்னிணைப்புகள் துண்டிக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் உரிமதாரர் தம்மிடம் உள்ள வைப்புத் தொகையில் மீதம் இருந்தால் திருப்பி தந்துவிடவேண்டும். | (3) மின்பகிர்மான முறையில் விரிவாக்கம் தேவைப்படாத நிலையில், தற்காலிகத் தேவைக்காக வழங்கப்படும் தற்காலிக மின்னிணைப்பு நாற்பத்தெட்டு மணி நேரத்திற்கு மிகாமல் வழங்கப்பட வேண்டும். மின்பகிர்மான முறையில் விரிவாக்கம் தேவைப்படும் இடங்களில், 4–ஆம் ஒழுங்குமுறைவிதியின் அட்டவணை I மற்றும் அட்டவணை II–இல் குறிப்பிடப்பட்டுள்ள கால நேர அட்டவணைகள் பின்பற்றப்பட வேண்டும்.<br><br>(4) தற்போதுள்ள சேவைக்கு பின் கட்டணம் செலுத்தும் முறையுடைய தற்காலிக மின்னிணைப்புகளுக்கு, தற்காலிக மின்விநியோக காலம் முடிவடைந்தவுடன், இருப்பு வைப்புத்தொகை மீதி இருப்பின், அந்நுகர்வோர் பெறும் நிரந்தர மின்னிணைப்பின் பாதுகாப்பு வைப்புத் தொகையுடன் சரி செய்யவோ அல்லது அதே மின்நுகர்வோரின் வேறொரு மின்னிணைப்பிற்கு மாற்றவோ அல்லது அதே மின்நுகர்வோரின் வங்கி கணக்கிற்கு மாற்றவோ அந்நுகர்வோரின் விருப்பத்தின்படி செயல்படுத்தப்பட வேண்டும்.<br><br>(5) பிற மின்னிணைப்பு(களு)க்கு மாற்ற விரும்பும் பட்சத்தில், அதற்குரிய விண்ணப்பம் கிடைக்கப்பெற்ற நாள் அல்லது மின்துண்டிக்கப்பட்ட நாள், இவற்றில் எது பிந்தையதோ அந்நாளிலிருந்து ஏழு நாட்களுக்குள் மின்உரிமதாரரால் மேற்கண்ட பணி மேற்கொள்ளப்பட வேண்டும். வங்கிக்கணக்கிற்கு மாற்ற விரும்பும் பட்சத்தில், சேவை துண்டிக்கப்பட்ட நாள் அல்லது நுகர்வோரின் வங்கிக் கணக்கு விவரங்கள் பெறப்பட்ட நாள் இவற்றில் எது பிந்தையதோ அந்நாளிலிருந்து ஏழுநாட்களுக்குள் மின்உரிமதாரரால் வங்கி கணக்கிற்கு மாற்றப்பட வேண்டும்.<br><br>(6) முற்றிலும் தற்காலிகத் தேவைக்காக வழங்கப்படும் தற்காலிக மின் இணைப்பை அவ்வப்போது திருத்தப்பட்ட மத்திய மின்சார ஆணையத்தின் (மின்னளவிகளை நிறுவுதல் மற்றும் இயக்குதல்) விதிமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ளபடி மின்னுரிமதரர் அல்லது நுகர்வோரால் வழங்கப்பட்ட முன்பணம் செலுத்தும் மின்னளவி (prepaid meter) மூலம் வழங்கப்பட வேண்டும். |
| 4. | **9. கட்டண வீத மாற்றம்:**<br><br>நுகர்வோர் பயன்படுத்தும் புது நோக்கத்துக்கான கட்டண வீதத்தில் மாற்றமேதும் இல்லாத வரையில் ஒரு நோக்கத்துக்காகப் பயன்படுத்தப் பெற்ற மின்னிணைப்பை வேறொரு நோக்கத்துக்காக பயன்படுத்தலாம். புது நோக்கத்திற்கு வேறு கட்டண வீதம் தான் பயன்படுத்த வேண்டுமென்றால், பயன்பாட்டு நோக்கத்தை மாற்றிக் கொள்வதற்கு முன்பே உரிமதாரருக்கு உரிய விண்ணப்பத்தைத் தந்து, கட்டண வீத மாற்றத்தைப் பதிவு செய்து திருத்திய சோதனை அறிக்கையை எடுக்க வேண்டும். | **9. மின்கட்டண வீதம் / நுகர்வோர் விவரங்கள் மாற்றம் மற்றும் மின்தேவை குறைப்பு:**<br><br>(1) ஒரு மின்நுகர்வோர் முதன்முதலில் குறிப்பிட்ட பயன்பாட்டிற்காக பெற்ற மின்இணைப்பை, அதற்கு நிர்ணயிக்கப்பட்ட மின்கட்டண வீதப்பட்டியலிலுள்ள மற்ற பயன்பாட்டிற்காக பயன்படுத்த முடியும். புதிய பயன்பாட்டிற்கு வேறுபட்ட மின்கட்டண வீதம் பொருந்தினால், மின்நுகர்வோர் மின்பயன்பாட்டை மாற்றுவதற்கு முன் மின்உரிமதாரருக்கு விண்ணப்பிக்க வேண்டும்; மற்றும் மின்கட்டண மாற்றத்தைக் குறிக்கும் திருத்தப்பட்ட சோதனை அறிக்கை தயார் செய்யப்பட வேண்டும். |
| | நுகர்வோரிடமிருந்து விண்ணப்பம் பெற்ற தேதியிலிருந்து ஏழு நாட்களுக்குள் உரிமதாரர் கட்டண வீத மாற்றத்தை நிறைவேற்ற வேண்டும்.<br><br>வேளாண்மை மின்னிணைப்புக் கட்டண வீதமில்லாத தா.அ. மின்னிணைப்பு எதையும் எந்தவொரு நுகர்வோரும் வேளாண்மை சார்ந்த தா.அ. மின்னிணைப்புக் கட்டண வீதத்துக்கு மாற்ற அனுமதிக்கக்கூடாது. | (2) மின்நுகர்வோரிடமிருந்து விண்ணப்பம் பெறப்பட்ட நாளிலிருந்து ஏழு பணி நாட்களுக்குள் மின்உரிமதாரர் கட்டணவீதத்தை மாற்றி அமைக்க வேண்டும்.<br><br>(3) எனினும், எவ்வகை மின்நுகர்வோரும், அவரின் தாழ்வழுத்த மின்னிணைப்பில், எந்த தாழ்வழுத்த கட்டண வீதத்திலிருந்தும் (விவசாய மின் இணைப்பு தவிர), விவசாய மின்கட்டண வீதத்திற்கு மாற்ற அனுமதிக்கப்பட மாட்டார். |

| வ. எண் | இருந்து வரும் வகை முறை | திருத்தம் செய்யப்பட்ட வகைமுறை |
|---|---|---|
| | | (4) மின்பகிர்மான உரிமதாரர், பருவகால மாற்றத்திற்கு ஏற்றவாறு அளிக்கப்பட்ட தேவை குறைப்பு விண்ணபத்தினை, மின்வழங்கல் விதித்தொகுப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளின் அடிப்படையில் செயல்படுத்த வேண்டும். <br><br> (5) நிரந்தர மின்தேவை குறைப்பு செயல்படுத்தப்படும் கால அளவு: <br><br> (i) ஏழு நாட்களுக்குள், அளவீட்டு அமைப்பு முறையில் மாற்றம் தேவைப்படாத போது. <br><br> (ii) நான்கு வாரங்களுக்கள், அளவீட்டு அமைப்பு முறையில் மாற்றம் தேவைப்படும்போது. <br><br> (6) மின்நுகர்வோர், முகவரி, தொலைபேசி எண், மின்னஞ்சல் முகவரி போன்ற விவரங்களில் உரிய ஆதாரங்களுடன் கோரும் மாற்றங்கள் / திருத்தங்கள் போன்றவைகள் உரிமதாரரின் நியமிக்கப்பட்ட அதிகாரியால் ஏழு நாட்களுக்குள் நிறைவேற்றப்பட வேண்டும். |
| 5. | **11. மின்னளவி மாற்றி வைத்தல்** <br><br> உரிமதாரர்கள் முறையீடுகள் வழியாகவோ அல்லது மின்னளவி ஆய்வின் போதோ, ஒரு மின்னிணைப்பில் உள்ள மின்னளவி பழுதுற்றோ, எரிந்தோ, அளவு சரியில்லாமலோ இருப்பதாக அறிந்தால், அத்தகைய மின்னளவியை உரிமதாரர், உரிய கட்டணங்களை வசூலித்ததும் முப்பது நாட்களுக்குள் சரியான புது மின்னளவி கொண்டு மாற்றி வைக்க வேண்டும். | **11. பழுதடைந்த / எரிந்த மின்னளவியை மாற்றுதல்** <br><br> மின்உரிமதாரர் பெற்ற புகார்கள் மூலமாக அல்லது ஆய்வின்போது அல்லது மின்கணக்கெடுப்பின்போது மின்னிணைப்பிலுள்ள மின்னளவி ஒழுங்காக செயல்படவில்லை அல்லது பழுதடைந்துள்ளது அல்லது எரிந்துள்ளது என கண்டறியப்பட்டால், உரிமதாரர் ஏழுநாட்களுக்குள் மின்னளவியை மாற்றவேண்டும். மின்னளவி இருப்பில் இல்லாதது, மின்சாரத்தை மீண்டும் வழங்குதலில் ஏற்படும் தாமதத்திற்கு காரணமாக இருத்தல் கூடாது. |
| 6. | **12. மின்வழங்கலில் நேரும் மின் குறுக்கீடுகளும் மீட்பும்** <br><br> (I) முதல் (V) வரை XXX | **12. மின்வழங்கலில் நேரும் மின் குறுக்கீடுகளும் மீட்பும்** <br><br> (I) முதல் (V) வரை XXX <br><br> (VI) மின்உரிமதாரர் துண்டிக்கப்பட்ட மின்விநியோகத்தை நிர்ணயிக்கப்பட்ட மின்சாரக் கட்டணம் அல்லது பிற பாக்கிகள் மற்றும் பிற கட்டணங்கள் பெறப்பட்டவுடன் துண்டிக்கப்பட்ட மின்னிணைப்பை உடனடியாக மறுஇணைப்பு செய்யவேண்டும் மற்றும் இந்த மறுஇணைப்புக்கான நேரம் எந்த சூழ்நிலையிலும் ஆறுமணி வேலை நேரத்திற்கு மிகையாமல் இருக்க வேண்டும். |
| 7. | **21. ஈட்டுத் தொகை** <br><br> விதிக்கப்பட்ட செயல்திறத்தை அடைய வேண்டுமென உரிமதாரர் எதிர்பார்க்கப்படுகிறார். பல்வேறு மின்சேவைப் பிரிவுகளில் குறிப்பிடப்பட்ட செந்தரங்களைச் சந்திக்க உரிமதாரர் தவறிவிட்டால், பாதிக்கப்பட்ட நுகர்வோர்கள் உரிமதாரரிடமிருந்து சட்டத்தில் விதிக்கப்பட்டுள்ள ஈட்டுத் தொகையைப் பெற உரிமயுடையவராவர். <br><br> * வழங்கப்படவேண்டிய நஷ்டஈடு கீழ்க்கண்ட அட்டவணையில் விவரிக்கப்படுகிறது. <br><br> **அட்டவணை—I** | **21. ஈட்டுத் தொகை** <br> மின்உரிமதாரர் பரிந்துரைக்கப்பட்ட செயல்திறனை நிறைவேற்ற எதிர்பார்க்கப்படுகிறார். ஒரு உரிமதாரர் பல்வேறு மின்சேவைப்பகுதிகளில் குறிப்பிடப்பட்ட தரநிலைகளைப் பூர்த்தி செய்யத் தவறினால், மின்சாரச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, பாதிக்கப்பட்ட நுகர்வோருக்கு, உரிமதாரரிடமிருந்து இழப்பீடு பெற உரிமை உண்டு. செலுத்த வேண்டிய இழப்பீடு கீழே உள்ள அட்டவணையில் வரையருக்கப்பட்டுள்ளது, அதாவது:— <br><br> **அட்டவணை—I** |

| *வ. எண்* | *இருந்து வரும் வகை முறை* | *திருத்தம் செய்யப்பட்ட வகைமுறை* |
|---|---|---|

**இருந்து வரும் வகை முறை**

| வ. எண். | நிகழ்ச்சிகள் | | செலுத்த வேண்டிய ஈட்டுத்தொகை |
|---|---|---|---|
| 1 | கேட்கும்போது மின் இணைப்பு கொடுக்கப்பட வேண்டியவை | | ஒரு நாள் தாமதத்துக்கு ரூ.100/– வீதம் பெருமமாக ரூ.1000/– க்கு மிகாமல் |
| | a) | புது மின்னிணைப்பு | |
| | b) | கூடுதல் மின் சுமை | |
| | c) | தற்காலிக மின் இணைப்பு | |
| | d) | மின்னிணைப்பு உரிமை மாற்றம் | |
| | e) | மின்னிணைப்பு இடமாற்றம் | |
| | f) | மின் கட்டண வீதமாற்றம் | |
| 2 | பட்டியலிடல் பற்றிய முறையீடுகள் | | உரிய காலத்திற்குள் பதில் தராமைக்கு ரூ.150/– |
| 3 | மின்னளவி மாற்றி வைத்தல் | | ஒரு நாள் தாமதத்திற்கு ரூ.100/– வீதம் பெருமமாக ரூ.1000/– க்கு மிகாமல் |
| 4 | மின்வழங்கல் தடங்கல் | | ஒவ்வொரு 6 மணிக்கும் அல்லது அதன் பகுதி தாமதத்துக்கும் ரூ.50/– வீதம் பெருமமாக ரூ.1000/– க்குமிகாமல் |
| 5 | மின்னழுத்த ஏற்ற இறக்கம் | | குறிப்பிட்ட காலத்துக்குள் வருகைதர அல்லது முடிவுகளைத் தெரிவிக்க தவறினால் ரூ.250/– |

**திருத்தம் செய்யப்பட்ட வகைமுறை**

| வ. எண் | நிகழ்வுகள் | | நிர்ணயிக்கப்பட்ட நேரத்தைத்தாண்டிய தாமதத்திற்கு நுகர்வோருக்கு செலுத்த வேண்டியது |
|---|---|---|---|
| 1 | கேட்கப்படும் மனுவை நிறைவேற்றும் பொருட்டு உரிமதாரரின் கடமைகள்: | | ஒருநாள் தாமதத்திற்கு ரூ.200/– வீதம் அதிகபட்சமாக ரூ.2000/–. |
| | (அ) | புதுமின்னிணைப்பு | |
| | (ஆ) | கூடுதல் மின் சுமை | |
| | (இ) | தற்காலிக மின் இணைப்பு | |
| | (ஈ) | மின்னிணைப்பு இடமாற்றம் | |
| | (உ) | மின்னிணைப்பு பெயர் மாற்றம் | |
| | (ஊ) | மின் கட்டண வீதம் / மின்நுகர்வோர் விவரங்கள் மாற்றம் மற்றும் மின்தேவை குறைப்பு. | |
| | (எ) | மின்துண்டிப்பு | |
| 2 | பட்டியல் வழங்கல் (மின்வழங்கல் விதித்தொகுப்பில் குறிப்பிடப்பட்டுள்ளப்படி) | | ஒரு நாள் தாமதத்திற்கு ரூ.10/– வீதம் அதிகபட்சமாக ரூ.500/–. |
| 3 | மறு இணைப்பு | | ஒவ்வொரு மணிநேர தாமதத்திற்கு ரூ.10/– வீதம் அதிகபட்சமாக ரூ.500/–. |

<table>
<tr><th>வ. எண்</th><th>இருந்து வரும் வகை முறை</th><th>திருத்தம் செய்யப்பட்ட வகைமுறை</th></tr>
<tr><td></td><td>
<table>
<tr><td>5A</td><td colspan="2">மின்னழுத்த முறையீடுகளை சரி செய்தல்</td><td></td></tr>
<tr><td></td><td>(அ)</td><td>மின்னமைப்பு விரிவாக்கம் அல்லது மின்திறன் அதிகரிப்பு எதுவும் தேவைப்படாதவிடத்து.</td><td>அதிகபட்ச தொகையான ரூ.1000/– க்கு உட்பட்டு, கால தாமதமான நாள் ஒவ்வொன்றுக்கும் ரூ.50/–</td></tr>
<tr><td></td><td>(ஆ)</td><td>தாழ்வழுத்தமின்னமைப்பு மின்மாற்றிகளின் தரம் உயர்த்துதல் அல்லது மின்கொண்மிகளை நிறுவுதல் தேவைப்படுமிடத்து.</td><td>அதிகபட்ச தொகையான ரூ.1000/– க்கு உட்பட்டு, கால தாமதமான நாள் ஒவ்வொன்றுக்கும் ரூ.50/–</td></tr>
<tr><td></td><td>(இ)</td><td>உயர் அழுத்த மின்னமைப்பை தரம் உயர்த்துதல் தேவைப்படுமிடத்து.</td><td>அதிகபட்ச தொகையான ரூ.1000/– க்கு உட்பட்டு, கால தாமதமான நாள் ஒவ்வொன்றுக்கும் ரூ.50/–</td></tr>
</table>
</td><td>
<table>
<tr><td>4</td><td>பட்டியல் தொடர்பான புகார்கள்.</td><td>குறிப்பிட்ட காலத்திற்குள் தீர்க்கப்படாவிடின் ரூ.300/–.</td></tr>
<tr><td>5</td><td>மின்னளவி மாற்றுதல்</td><td>ஒரு நாள் தாமதத்திற்கு ரூ.200/– வீதம் அதிகபட்சமாக ரூ.2000/–.</td></tr>
<tr><td>6</td><td>மின்வழுங்கல் தடை</td><td>மின்விநியோகத்தை மீண்டும் வழங்குவதில் ஏற்படும் ஒவ்வொரு 6 மணிநேரம் அல்லது அதன் பகுதி தாமதத்திற்கு ரூ.100/– வீதம் அதிகபட்சமாக ரூ.2000/–.</td></tr>
</table>
</td></tr>
<tr><td></td><td>
<table>
<tr><td>6</td><td>நுகர்வோர் முறையீடுகளுக்குப் பதில் நடவடிக்கை</td><td>ஒவ்வொரு நாள் தாமதத்துக்கும் ரூ.25/– வீதம் பெருமமாக ரூ.250/– க்கு மிகாமல்</td></tr>
<tr><td>7</td><td>நுகர்வோர் சந்திப்பு ஏற்பாடுகளும் பதிதலும்</td><td>சந்திப்பு ஏற்பாட்டைத் தவற விட்டால் ரூ.50/–</td></tr>
<tr><td>8</td><td>குறை தீர்ப்பைக் கையாளுதல்</td><td>குறை தீர்ப்பைக் கையாளத் தவறிவிட்டால்ரூ.50/–</td></tr>
</table>
</td><td>
<table>
<tr><td>7</td><td colspan="2">நம்பகத் திறன் குறியீடுகளை கடை பிடிக்காமை:</td><td></td></tr>
<tr><td></td><td>(அ)</td><td>ஒழுங்குமுறை விதி 25–ன் அட்டவணையில் நிர்ணயிக்கப்பட்ட ஒரு மின்நுகர்வோருக்கான SAIDI குறியீடு (நிமிடங்களில்)</td><td>SAIDI அளவை குறிப்பிட்ட வரம்பிற்கு மீறிய உயரழுத்த மின்கடத்தியில் இணைக்கப்பட்ட ஒரு மின்நுகர்வோருக்கு ஒரு நிமிடத்திற்கு 5 பைசா வீதம்.</td></tr>
<tr><td></td><td>(ஆ)</td><td>ஒழுங்குமுறைவிதி 25–ன் அட்டவணையில் நிர்ணயிக்கப்பட்ட ஒரு மின்நுகர்வோருக்கான மின்தடைக்கான SAIFI குறியீடு</td><td>SAIFI அளவை குறிப்பிட்ட வரம்பிற்கு மீறிய உயரழுத்த மின்கடத்தியில் இணைக்கப்பட்ட ஒரு மின்நுகர்வோருக்கு ஒரு மின்தடைக்கு 50 பைசா வீதம்.</td></tr>
</table>
</td></tr>
</table>

| வ. எண் | இருந்து வரும் வகை முறை | திருத்தம் செய்யப்பட்ட வகைமுறை |
|---|---|---|
| | 9 \| தற்காலிக மின் வழங்கல் காலம் முடிவடைந்த பின்பு தற்காலிக மின் வழங்கல் பொறுத்த வைப்பீட்டுத் தொகையைத் திருப்பிக் கொடுத்தல் மற்றும் மின் பகிர்மானச் செயல்திறச் செந்தரங்களுங்கான ஒழுங்குமுறைவிதிகளின் 6ஆம் ஒழுங்குமுறை விதியில் அல்லது தமிழ்நாடு மின் வழங்கல் விதித்தொகுப்பின் 17(6) ஆம் ஒழுங்குமுறை விதியில் அல்லது தமிழ்நாடு மின் பகிர்மான விதித்தொகுப்பின் 33(5) ஆம் ஒழுங்கு முறை விதிகளில் குறிப்பிடப்பட்டவாறான கால அளவிற்குள் மீதி வைப்பீட்டுத் தொகையயை திருப்பிக் கொடுத்தல். \| திருப்பிக் கொடுக்கும் நாள் வரையில், ஆணையத்தினால் குறித்துரைக்கப்பட்ட வீதத்திலான வட்டிக்குக் கூடுதலாக வாரம் ஒன்றுக்கு அல்லது காலத்தாழ்வின் அதன் பகுதிக்கு ரூ.100 | 8 \| மின்னழுத்தம் தொடர்பான புகார்கள் \| குறிப்பிட்ட கால அளவிற்குள் ஆய்வு மேற்கொள்ளாமை அல்லது காரணங்கள் தெரிவிக்காமைக்கு ரூ.500/—.<br>9 \| மின்னழுத்தம் தொடர்பான புகார்களை சீரமைத்தல் \|<br>(அ) \| மின்கட்டமைப்பு நீட்டிப்பு அல்லது மேம்பாட்டு பணி எதுவும் உள்ளடங்காதவை. \| ஒருநாள் தாமதத்திற்கு ரூ.100/— வீதம் அதிக பட்சமாக ரூ.2000/—.<br>(ஆ) \| தாழ்வழுத்த மின்கட்டமைப்பு மேம்படுத்துதல் அல்லது மின்உபகரணங்கள் நிறுவுதலை உள்ளடக்கியவை. \| ஒரு நாள் தாமதத்திற்கு ரூ.100/— வீதம் அதிக பட்சமாக ரூ.2000/—.<br>(இ) \| உயர்வழுத்த மின்கட்டமைப்பு மேம்படுத்துதலை உள்ளடக்கியவை. \| ஒரு நாள் தாமதத்திற்கு ரூ.100/— வீதம் அதிகபட்சமாக ரூ.2000/—. |
| | | 10 \| நுகர்வோர் முறையீடுகளுக்கு எடுக்கப்பட்ட பதில் நடவடிக்கை \| ஒவ்வொரு நாள் தாமதத்திற்கும் ரூ.50/— வீதம் அதிகப்பட்சமாக ரூ.500/—.<br>11 \| நுகர்வோர் சந்திப்பு ஏற்பாடுகளும் கடைப்பிடித்தலும் \| சந்திப்பை மேற்கொள்ள தவறினால் ரூ.100/—.<br>12 \| குறைதீர்ப்பைக் கையாளுதல் \| குறைதீர்ப்பைக் கையாளத் தவறினால் ரூ.100/—.<br>13 \| தற்காலிக மின்வழங்கல் காலம் முடிவடைந்த பிறகு தற்காலிக வழங்கல் தொடர்பான வைப்புத்தொகையைத் திரும்ப வழங்குதல் மற்றும் செயல்திறன் ஒழுங்கு முறைகளின் ஒழுங்குமுறை 6 இல் அல்லது \| ஒவ்வொரு வாரமும் அல்லது அதன் ஒரு பகுதி தாமதத்திற்கு ரூ.200/— வீதம், கட்டணம் திரும்ப வழங்கும் |

<table>
<tr><th>வ. எண்</th><th>இருந்து வரும் வகை முறை</th><th>திருத்தம் செய்யப்பட்ட வகைமுறை</th></tr>
<tr><td></td><td></td><td><table><tr><td></td><td>தமிழ்நாடு மின்சாரம் வழங்கல் குறியீடு உள்ஒழுங்குமுறை விதி 5 (6) (viii) இல் அல்லது தமிழ்நாடு மின்சார விநியோகக் குறியீட்டின் உள்ஒழுங்குமுறைவிதி 33 (5) இல் குறிப்பிடப்பட்டுள்ள காலத்திற்குள் இருப்பு வைப்புத் தொகையைத் திரும்ப வழங்குதல்</td><td>தேதிவரை ஆணையம் நிர்ணயித்துள்ள வட்டிவிகிதம் உட்பட, அதிகபட்சமாக ரூ.2000/–</td></tr></table></td></tr>
<tr><td></td><td></td><td><table><tr><td>14</td><td>சூரிய சக்தி ஒளி வோல்ட் (PV) மின்னுற்பத்தி அமைப்பு முறைகள் (GISS)–ஐ மின்கட்டமைப்புடன் இணைப்பதில் விண்ணப்பம் பெறுவதிலிருந்து மின்கட்டமைப்புடன் இணைக்கப்படும் வரையிலான பல்வேறு நடவடிக்கைகளுக்காக ஆணையத்தின் GISS ஒழுங்குமுறை விதியில் குறிப்பிடப்பட்டுள்ள காலக்கெடு.</td><td>ஒவ்வொரு நாள் அல்லது அதன் பகுதி தாமதத்திற்கு ரூ.500/– வீதம் அதிகபட்சமாக ரூ.2000/–.</td></tr></table></td></tr>
<tr><td>8</td><td> 22. ஈட்டுத் தொகை கட்டும் வழிமுறை
(i) பின்வரும் முறையில் ஈட்டுத் தொகை கோரல் நிறைவேற்றப்படவேண்டும்.
தானே – இவ்வகை செலுத்த முறைமையில் உரிமதாரர் பாதிக்கப்பட்ட நுகர்வோருக்குத் தானே ஈட்டுத் தொகையைச் செலுத்த வேண்டும்.
(ii) கோரலின் பேரில்:–செந்தரங்களைக் கடைபிடிக்காமையால் பாதிப்புற்ற நுகர்வோர்களுக்கான உரிய ஈட்டுத் தொகையை உரிமதாரர் அடுத்த பட்டியலிடும் காலத்துக்குள் செலுத்தத் தவறினால், நுகர்வோர் அதற்காகக் குறிப்பிடப்பட்ட உரிமதாரரின் பணியாளருக்கு முறையீடு செய்து அதைக் கோரிப் பெற உரிமையுடையவராவார். </td>
<td> 22. ஈட்டுத் தொகை கட்டண வழிமுறை
இழப்பீடுக்கான கோரிக்கை பின்வரும் முறைகளில் கையாளப்படும்:
I. தானியங்கி முறை – மின்பகிர்மான உரிமதாரரின் தொலைநிலையில் கண்காணிக்கப்படும் செயல்திறன் அளவுருவில் தவறு இருப்பதாக உறுதியாக நிரூபிக்கப்படும் பட்சத்தில், அத்தகைய அளவுருகளுக்கு நுகர்வோர் தானாகவே ஈடுசெய்யப்படுவர்.
II. கோரிக்கையின்பேரில்: உரிமதாரர் இழப்பீட்டுத் தொகையை அடுத்து வரும் பட்டியல் சுற்றுக் கால அளவிற்குள் வழங்கத் தவறினால் பாதிக்கப்பட்ட நுகர்வோர், உரிமதாரரின் நியமிக்கப்பட்ட பணியாளரிடம் முறையீடு செய்வதன் மூலமாகவும், அல்லது உரிமதாரரின் இணையதளத்தில் பதிவு செய்வதன் மூலமாகவும், செந்தரங்களைக் கடைபிடிக்காமைக்கான இழப்பீட்டைக் கோருவதற்கு உரிமை உடையவராவார். </td></tr>
</table>

| வ. எண் | இருந்து வரும் வகை முறை | திருத்தம் செய்யப்பட்ட வகைமுறை |
|---|---|---|
| | | 1) இந்த ஒழுங்குமுறைவிதித் தொகுப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அளவுருக்களின்படி தங்கள் செயல்திறன் நிறைவேற்றப்பட்டுள்ளதா இல்லையா என்பதை உறுதி செய்து மின்நுகர்வோருக்கு இழப்பீட்டை தானியங்கி முறையில் அமல்படுத்தும் பொருட்டு மின்பகிர்மான உரிமதாரர் தொலைநிலை கண்காணிப்பு பொறிமுறையை நிறுவ வேண்டும்.<br>(2) மின்பகிர்மான உரிமதாரர், இந்த உள்ஒழுங்குமுறைவிதித் தொகுப்பு அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து ஆறு மாதங்களுக்குள், நுகர்வோர் நிகழ்நிலையில் பதிவுசெய்து இழப்பீட்டுத் தொகையைப் பெறக்கூடிய நிகழ்நிலை வசதியை உருவாக்க வேண்டும். இது தொடர்பான தகவல்களை வெகு ஜன ஊடகங்கள் (mass media), பட்டியல்கள், குறுஞ்செய்தி, மின்னஞ்சல்கள் மூலம் பரவலாக அறிவிக்கப்பட வேண்டும் அல்லது மின்உரிமதாரரின் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.<br>(3) மின்விநியோக உரிமதாரர் தொலைநிலையில் கண்காணிக்கக்கூடிய அளவுருக்களின் பட்டியலை படிப்படியாக அதிகரிக்கும் வகையில் கணினியை வடிவமைத்து, மேம்படுத்தி, பராமரிக்க வேண்டும்.<br>(4) இழப்பீட்டுக்கான அனைத்து நிகழ்வுகளிலும், அடுத்த இரண்டு பட்டியல் சுற்றுக்கால அளவிற்குள் தற்போதைய அல்லது எதிர்கால கட்டணங்களில் சரி செய்தல் மூலம் இழப்பீடு அளிக்கப்பட வேண்டும். இந்த இரண்டு பட்டியல் காலவட்டத்தில் கணக்கிடப்பட்ட தொகையை விட இழப்பீட்டுத்தொகை அதிகமாக இருக்கும் பட்சத்தில், அடுத்து வரும் பட்டியலில் மீதமுள்ள தொகை சரி செய்யப்பட வேண்டும். |
| 9 | **24. செயல்திறச் செந்தரம் பற்றிய தகவல்**<br>உரிமதாரர்கள், சட்டத்தின் 59 ஆம் சட்டப்பிரிவில் உள்ள துணைப் பிரிவு (1) ன்படி விதிக்கப்பட்டுள்ள படிவத்தில், அடையப்பட்ட செயல்திற மட்டம், ஈட்டுத் தொகை செலுத்தப்பட்ட நேர்வுகளின் எண்ணிக்கை, செலுத்தப்பட்ட ஒட்டுமொத்த ஈட்டுத் தொகை ஆகியவை பற்றிய தகவலை ஆறு மாதத்துக்கு ஒரு முறை ஆணையத்துக்கு அனுப்ப வேண்டும். இது சட்டத்தின் 59 ஆம் சட்டப்பிரிவில் உள்ள (2) ஆம் துணைப்பிரிவின்படி அத்தகவலை அச்சிட்டு உரிமதாரர் வெளியிட வேண்டியதற்கான ஒப்புதலை வழங்க, ஆணையத்துக்கு உதவும். | **24. புவியியல் தகவல் அமைப்பு (Geographic Information System -GIS) மூலம் செயல்திறனின் தரநிலை மற்றும் சொத்துக்கள் / நுகர்வோர் தகவல்கள் பதிவேற்றம் (mapping):**<br>(1) மின்பகிர்மான உரிமதாரர்கள், சட்டத்தின் 59–ஆம் பிரிவில் உள்ள துணைப் பிரிவு (1)ன்படி விதிக்கப்பட்டுள்ள படிவத்தில், அடையப்பெற்ற செயல்திறமட்டம், ஈட்டுத் தொகை செலுத்தப்பட்ட நேர்வுகளின் எண்ணிக்கை, செலுத்தப்பட்ட ஒட்டுமொத்த ஈட்டுத் தொகை ஆகியவை பற்றிய தகவலை ஆறு மாதத் மாதத்திற்கு ஒரு முறை ஆணையத்துக்கு அனுப்ப வேண்டும். சட்டத்தின் –59ஆம் பிரிவில் உள்ள (2)–ஆம் துணைப்பிரிவின்படி அத்தகவலை உரிமதாரர் வெளியிடுவதற்கு ஆணையம் ஒப்புதல் அளிக்கும் வகையில் ஆணையத்தால் பரிந்துரைக்கப்பட்ட படிவத்தில் தகவல்கள் அளிக்கப்பட வேண்டும்.<br>(2) புதிய மின்இணைப்பு, மின்துண்டிப்பு, மறுமின்இணைப்பு, மின்இணைப்பை மாற்றுதல், பெயர் மற்றும் விவரங்களில் மாற்றம், மின்தேவை மாற்றம், மின்னளவி மாற்றுதல் போன்ற பொதுவான சேவைகளுக்காக 24x7 கட்டணமில்லா அழைப்பு மையத்தை நிறுவ உரிமதாரர் முயற்சிக்க வேண்டும். இருப்பினும் காகிதத்தொடர்பு, மின்னஞ்சல், கைபேசி, இணையதளம் போன்ற முறைகள் மூலம் சேவைகளை தொடர்ந்து வழங்கலாம். உரிமதாரர்கள் ஒரு பொதுவான வாடிக்கையாளர் தொடர்பு மேலாளர் (Consumer Relationship Mamanger–CRM) |

| வ. எண் | இருந்து வரும் வகை முறை | திருத்தம் செய்யப்பட்ட வகைமுறை |
|---|---|---|
| | | அமைப்பின் மூலம் அனைத்து சேவைகளையும் வழங்கி, பின்தளத்தில், கோரப்பட்ட, முடிக்கப்பட்ட மற்றும் நிலுவையில் உள்ள அனைத்து சேவைகளின் ஒருங்கிணைந்த பார்வையைப் பெற சிறந்த கண்காணிப்பு மற்றும் பகுப்பாய்வு முறையை ஏற்படுத்த வேண்டும்.<br>(3) விண்ணபத்தைப் பெறுதல், சேவையை நிறைவு செய்தல், விண்ணபத்தின் நிலையில் மாற்றம் போன்ற நிகழ்வுகளை, நுகர்வோர் மற்றும் அதிகாரிகளுக்கு, குறுஞ்செய்தி (SMS) மற்றும் மின்னஞ்சல் (email) விழிப்பூட்டல்கள் மூலம் அறிவிக்கும் வசதிகளை வாடிக்கையாளர் தொடர்பு மேலாளர் (CRM) கொண்டிருக்க வேண்டும். குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் சேவைகள் வழங்கப்படாவிட்டால், அச்சேவைகளின் நிலையை நிகழ்நிலையில் கண்காணிக்கவும், உயர்மட்டத்திற்கு தானாக தெரியப்படுத்துவதற்கான வசதிகளையும் வாடிக்கையாளர் தொடர்பு மேலாளர் (CRM) கொண்டிருக்க வேண்டும்.<br>(4) திட்டமிடப்பட்ட மின்வெட்டுகளின் விவரங்கள் மின்வெட்டு நிகழப்போகும் பகுதியிணை குறிப்பிட்டு நுகர்வோருக்கு தெரிவிக்கப்பட வேண்டும். திட்டமிடப்படாத மின்தடை அல்லது மின்கோளாறு ஏற்பட்டால், உடனடியாக குறுஞ்செய்தி மூலமாகவோ அல்லது வேறு ஏதேனும் மின்னணு முறையில் மறுசீரமைப்பிற்கான மதிப்பிடப்பட்ட நேரத்துடன் நுகர்வோருக்கு தெரிவிக்கப்பட வேண்டும். இந்த தகவல் மின்பகிர்மான உரிமதாரரின் மேற்கண்ட அழைப்பு மையத்திலும் கிடைக்கும் படி செய்திட வேண்டும்.<br>(5) மின்பகிர்மான உரிமதாரர், அனைத்து விநியோகங்கள், பிரிவு அலுவலகங்கள், வட்டங்கள், கோட்டங்கள் மற்றும் மண்டலங்கள் ஆகியவற்றில், துணைநிலையம் வாரியாக, மின்வழித்தடம் வாரியாக மற்றும் விநியோக மின்மாற்றி வாரியாக, புவியியல் தகவல் அமைப்பு (GIS) அடிப்படையில் சொத்துக்கள் / நுகர்வோர் விவரங்கள் பதிவேற்றம் செய்து (Consumer mapping) பராமரிக்கப்பட வேண்டும். புவியியல் தகவல் அமைப்பு (GIS) மென்பொருளானது மின்கட்டண மென்பொருள் (Billing Software), ஆற்றல் தணிக்கை மென்பொருள் (Energy Audit Software) மற்றும் துணைநிலையம் தொடர்பான மென்பொருளுடன் (SS Monitoring Software) ஒருங்கிணைக்கப்பட்டு, அனைத்து தரவுத்தளங்களில் இருந்தும் ஒரே மாதிரியான மற்றும் பிழையற்ற தரவுகளை உருவாக்க வேண்டும். மேற்கூறப்பட்ட புவியியல் தகவல் அமைப்பு விவரங்கள் பதிவேற்றமானது திறமையான மின்பகிர்மானம் / மின்விநியோக பராமரிப்புகளுக்காகவும், மின்தடை மேலாண்மை பணிகளுக்காகவும் மற்றும் நுகர்வோர் / அதிகாரிகள் / இயக்குபவர்களுடன் தடையற்ற தொடர்பு மேற்கொள்வதற்காகவும், மேற்பார்வைக் கட்டுப்பாடு மற்றும் தரவு கையகப்படுத்தல் (SCADA) அமைப்பு, மின்ஊட்டி கண்காணிப்பு / விநியோக மேலாண்மை அமைப்பு, மின்தடை மேலாண்மை அமைப்பு (Distribution Management System - DMS), அழைப்பு மையம் (call centre) அமைப்பு மற்றும் பிற தொகுதிகளுடன் ஒருங்கிணைக்கப்பட்டு அதன் மூலம் செயலூக்கம் உடைய மின் வழங்கல் / விநியோக பராமரிப்பு, |

| வ. எண் | இருந்து வரும் வகை முறை | திருத்தம் செய்யப்பட்ட வகைமுறை |
|---|---|---|
| | | மின் செயலிழப்பு மேலாண்மை (Outage Management System); மற்றும் நுகர்வோர்கள், அலுவலர்கள், இயக்குபவர்களிடம் கோர்வையான தகவல் தொடர்பு போன்றவை ஏற்பட வழிவகை செய்தல் வேண்டும்.<br>(6) அனைத்து மரபு சொத்துக்களும் புவி–குறியீட்டுடன், விநியோக உரிமதாரரால் பராமரிக்கப்படும் நிலையான சொத்துப்பதிவேட்டில் முறையாக பதிவு செய்யப்பட வேண்டும். |
| 10. | 25. மின்னிணைப்பு நம்பகத்தன்மை<br><br>பின்வரும் நம்பகத்தன்மை / மின் தடங்கல் அடுக்கு குறிகள், சுட்டு 1366 / 1998 மின்சார மற்றும் மின்னணுவியல் பொறியாளர்கள் (IEEE) செந்தரத்தினால் வகுத்துரைக்கப்படும் உரிமம்தாரர், கீழே குறித்துரைக்கப்பட்ட சூத்திரம் மற்றும் முறைமையின்படி இந்த அடுக்குக் குறிகளின் மதிப்பை கணித்தல் மற்றும் அறிவித்தல் வேண்டும்<br><br>i. சராசரி தடை அலைவெண் அடுக்குக்குறி அமைப்பு (SAIFI);<br>ii. சராசரி தடை காலவரை அடுக்குக்குறி அமைப்பு (SAIDI);<br><br>**மின் பகிர்வு அமைப்பின் நம்பகத்தன்மை அடுக்குக்குறியின் எண்களை கணக்கிடுவதற்கான முறை:**<br><br>அடுக்குக்குறி, மின் வழங்கல் பகுதியிலுள்ள மின்னூட்டிகளின் 11KV / 22KV உடைய அனைத்து மின்னூட்டிகள் முக்கியமான வேளாண்சுமைகளுக்கான மின்னிணைப்புகள் நீங்கலாக மற்றும் ஒவ்வொரு மின்னூட்டிக்கும் அந்த மாதத்தில் ஏற்படும் தடைகளின் எண்ணிக்கை மற்றும் காலவரையையும் ஒன்று சேர்த்து ஒவ்வொரு மாதத்திற்காகவும் அடுக்கி வைக்கப்பட்டு முழுவதும் மின் பகிர்வு உரிமம்தாரருக்காகக் கணக்கிடப்படுதல் வேண்டும். அடுக்குக்குறிகள் பின்வரும் சூத்திரத்திரத்தை பயன்படுத்தி கணக்கிடப்படும்:<br><br>1. SAIFI= $\frac{\sum_{i=1}^{n} (A_i * N_i)}{N_t}$ இதில்,<br><br>Ai = ஒரு மாதத்திற்கான i வது மின்னூட்டியில், ஒவ்வொன்றும் 5 நிமிடங்களுக்கு மேலாக ஏற்பட்ட தடைகளின் மொத்த எண்ணிக்கை<br><br>$N_i$ = ஒவ்வொரு தடையின் பொருட்டும் பாதிக்கப்பட்ட i வது மின்னூட்டியின் இணைக்கப்பட்ட சுமை.<br><br>$N_t$ = மின் பகிர்வு உரிமதாரரின் மின் வழங்கல் பகுதியிலுள்ள 11 / 22KV யில் இணைக்கப்பட்ட மொத்த சுமை.<br><br>n = அதிகமான வேளாண்சுமை இணைக்கப்பட்ட மின்னூட்டிகள் நீங்கலாக மின் வழங்கலுக்கான உரிமம் பெற்ற பகுதியிலுள்ள 11 / 22KV மின்னூட்டிகளின் எண்ணிக்கை.<br><br>2. SAIDI= $\frac{\sum_{i=1}^{n} (B_i * N_i)}{N_t}$ | 25. சேவையின் நம்பகத்திறன்<br><br>(1) பகிர்மான உரிமதாரர், அதன் விநியோக அமைப்பின் நம்பகத் திறனை கணக்கிட, ஒரு அறிக்கையிடல் காலத்தில், நீடித்த மின்தடைகளின் (5 நிமிடங்களுக்கு மேல்) எண்ணிக்கை மற்றும் கால அளவு ஆகியவற்றின் அடிப்படையில் பின்வரும் குறியீடுகளைப் பயன்படுத்த வேண்டும்:<br><br>i. ‘அமைப்பின் சராசரி தடங்கல் நிகழ்வெண் குறியீடு’ (System Average Interruption Frequency Index (SAIFI);<br><br>ii. ‘அமைப்பின் சராசரித் தடங்கல் காலவரை குறியீடு’ (System Average Interruption Duration Index (SAIDI);<br><br>(2) விநியோகப்பகுதியில் உள்ள அனைத்து 11கி.வோ, 22கி.வோ மற்றும் 33கி.வோ மின்னூட்டிகளுக்கும் (33/11 கி.வோ துணை மின்நிலையத்திற்கு மின்சாரம் வழங்க உட்செல்லும் 33 கி.வோ மின்னூட்டிகள் தவிர) ஒவ்வொரு மாதமும் விநியோக உரிமதாரர்களுக்கான குறியீடுகள் கணக்கிடப்படும், பின்னர் அந்த மாதத்தில் ஒவ்வொரு மின்னூட்டிகளில் ஏற்படும் மின்தடைகளின் எண்ணிக்கை மற்றும் கால அளவுகள் அனைத்தையும் தொகுக்க வேண்டும். குறியீடுகள் பின்வரும் சூத்திரத்திரத்தை பயன்படுத்தி கணக்கிடப்படும்:<br><br>SAIFI= $\frac{\sum_{i=1}^{n} (N_i \times C_i)}{C_t}$<br><br>SAIDI= $\frac{\sum_{i=1}^{n} (T_i \times C_i)}{C_t}$<br><br>இவற்றில்,<br><br>$N_i$= மாதத்திற்கான i–வது மின்கடத்தியில் நீடித்த (ஒவ்வொன்றும் 5 நிமிடங்களுக்கு மேல்) மின்தடைகளின் மொத்த எண்ணிக்கை;<br><br>$T_i$= மாதத்திற்கான மின்கடத்தியில் நீடித்த (5 நிமிடங்களுக்குமேல்) அனைத்து மின்தடைகளின் மொத்த கால அளவு, நிமிடங்களில்;<br><br>$C_i$= ஒவ்வொரு நீடித்த மின்தடைகளினால் பாதிக்கப்பட்ட i–வது மின்கடத்தியில் உள்ள நுகர்வோரின் எண்ணிக்கை;<br><br>$C_t$= மின்விநியோகப் பகுதியில் உள்ள “n'' மின்கடத்தியில் இணைக்கப்பட்டு மின்பகிர்மான உரிமதாரரால் மின்விநியோகம் வழங்கப்படும் மொத்த நுகர்வோர்களின் எண்ணிக்கை; |

<table>
<tr><th>வ. எண்</th><th>இருந்து வரும் வகை முறை</th><th>திருத்தம் செய்யப்பட்ட வகைமுறை</th></tr>
<tr><td></td><td>
இதில்,
Bi = ஒரு மாதத்திற்கான மின்னூட்டியில் ஏற்பட்ட தடைகளின் மொத்தக் காலவரை.
விளக்கம்:
மின்னூட்டிகள் ஊரகம் மற்றும் நகரகம் என்று பிரிக்கப்படுதல் வேண்டும். மற்றும் அடுக்குக்குறியின் மதிப்பு ஒவ்வொரு மாதத்திற்காகவும் தனியாக அறிக்கை செய்யப்படுதல் வேண்டும்.
(i) உரிமம்தாரர், முக்கியமான வேளாண் சுமைக்கான மின்னூட்டிகளுக்காகத் தனியாக அடுக்குக்குறிகளின் மதிப்பு கணக்கிடுதல் வேண்டும். மற்ற மின்னூட்டிகளுக்கு அடுக்குக்குறிகளின் மதிப்பை கணக்கிடுதல் போலவே, இதற்கும் கணக்கிட வேண்டும்.
(ii) உரிமம்தாரர்களால் வழங்கப்படும் தகவலின் அடிப்படையில், ஆணையம், ஆண்டுதோறும் இந்த அடுக்குக்குக்குறிகளின் இலக்குகளை அறிவிக்கை செய்தல் வேண்டும்.
</td><td>
n= உரிமம் பெற்ற மின்விநியோகப்பகுதியில் உள்ள 11 கி.வோ, 22 கி.வோ. மற்றும் 33 கி.வோ. மின்கடத்திகளின் எண்ணிக்கை;
(3) மின்பகிர்மான உரிமதாரர் மாதாந்திர அடிப்படையில் கீழே உள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வரம்புகளுக்குள் குறியீடுகள் இருக்குமாறு பராமரிக்க வேண்டும்:
அட்டவணை:
வெற்று நிலப்பரப்புக்கான நம்பகத் திறன் குறியீடுகளுக்கான வரம்புகள்
<table>
<tr><th rowspan="2">நம்பகத் திறன் குறியீடுகள்</th><th colspan="2">மாதாந்திர வரம்புகள்</th></tr>
<tr><th>நகர்ப்புறம்</th><th>கிராமப்புறம்</th></tr>
<tr><td>SAIDI</td><td>600 நிமிடம் ஒவ்வொரு நுகர்வோருக்கும்</td><td>1200 நிமிடம் ஒவ்வொரு நுகர்வோருக்கும்</td></tr>
<tr><td>SAIFI</td><td>15 மின்தடைகள் ஒவ்வொரு நுகர்வோருக்கும்</td><td>25 மின்தடைகள் ஒவ்வொரு நுகர்வோருக்கும்</td></tr>
</table>
</td></tr>
<tr><td></td><td></td><td>
(4) மின்கடத்திகள் கிராமம் மற்றும் நகர்ப்புறம் எனப் பிரிக்கப்பட்டு தனித்தனியாக குறியீடுகளின் மதிப்பை ஒவ்வொரு மாதமும் வட்டம் வாரியாக கணக்கிடப்பட வேண்டும்.
(i) நிர்ணயிக்கப்பட்ட நம்பகத் திறன் குறியீடுகளை கணக்கிடும் போது, பின்வரும் வகையான மின்தடைகள் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படாது:
(அ) ஐந்து நிமிடங்களுக்கும் குறைந்த கால அளவிலான கண நேர மின்தடை;
(ஆ) சூறாவளி, வெள்ளம், புயல்கள், போர், கலகம், உள்நாட்டுக்கலவரம், கலவரங்கள், மின்னல், நிலநடுக்கம், கதவடைப்பு, மின்கட்டமைப்பு செயலிழப்பு, உரிமதாரரின் நிறுவல்கள் மற்றும் செயல்பாடுகளை பாதிக்கும், தடுக்க முடியாத வலுக்கட்டாய (Force majeure) நிகழ்வுகளால் ஏற்படும் மின்தடங்கல்கள்;
(இ) தேசிய மின்சுமை பகுப்பு மையம் / மண்டல மின்சுமை பகுப்பு மையம் / மாநில மின்சுமை பகுப்பு மையம் ஆகியவற்றின் செயல்முறை குறைபாடுகளினால் ஏற்படும் மின்தடங்கல்;
(ii) நிர்ணயிக்கப்பட்ட நம்பகத் திறன் குறியீடுகளை கணக்கிடும் போது, கால வரையீட்டு அல்லது திட்டமிடப்பட்ட மின்தடங்கலினால் ஏற்படும் மின்தடைகள் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்.
(iii) மின்பகிர்மான உரிமதாரர் நம்பகத் திறன் குறியீடுகளின் தரவைகளை முடிந்தவரை மனித தலையீடுகள் எதுவும் இல்லாத வண்ணம், நேரடியாக மின்விநியோகம் / மின்கடத்தி கண்காணிப்பு அமைப்பு / மின்தடை மேலாண்மை அமைப்பிலிருந்து பெறப்பட வேண்டும்.
(iv) மின்பகிர்மான உரிமதாரர் ஒவ்வொரு வட்டத்திற்கும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள நம்பகத் திறன் குறியீடுகளின் தரவை மாதாந்திர அடிப்படையில் பராமரிக்க வேண்டும்.
</td></tr>
</table>

| *வ. எண்* | *இருந்து வரும் வகை முறை* | *திருத்தம் செய்யப்பட்ட வகைமுறை* |
|---|---|---|
| | | (v) மின்பகிர்மான உரிமதாரர், ஒவ்வொரு மாத இறுதியிலும், நம்பகத் திறன் குறியீடுகள் குறித்த மாதாந்திர தகவல்களை மின்பகிர்மான உரிமதாரரின் இணையதளத்தில் ஏற்றம் செய்து, அத்தகைய அறிக்கையை காலாண்டுக்கு ஒரு முறை ஆணையத்திடம் சமர்ப்பிக்க வேண்டும்.<br><br>(vi) தரவைச் சமர்ப்பிப்பதற்கான படிவம் ஆணையத்தால் நிர்ணயிக்கப்பட்ட வடிவில் இருக்க வேண்டும்.<br><br>(vii) இந்த தரவுப் படிவம் கிராமப்புறம் / நகர்ப்புறங்கள் / வட்டம் வாரியாக தனித்தனியாக நிரப்பப்பட வேண்டும்.<br><br>(viii) உரிமம்தாரர் அதிகப்படியான விவசாய மின்சுமைகள் உள்ள மின்கடத்திகளில் இந்த குறியீடுகளின் மதிப்பை தனியாக கணக்கிட வேண்டும். குறியீடுகளைக் கணக்கிடுவதற்கான முறையானது மற்ற மின்கடத்திகளின் கணக்கிடும் முறையின் படியே அமையும்.<br><br>(5) மின்பகிர்மான உரிமதாரர், அனைத்து நுகர்வோருக்கும் திட்டமிடப்பட்ட பராமரிப்பு மற்றும் எதிர்பாராத மின்தடைகளை தவிர்த்து 24x7 மின்சாரம் வழங்க வேண்டும். இருப்பினும், மின்பகிர்மான உரிமதாரர், மின்விநியோகம் மற்றும் மின்தேவை நிலையை அவ்வப்போது மதிப்பாய்வு செய்ய வேண்டும். விவசாயம் போன்ற சிலவகை நுகர்வோருக்கு, மின்கட்டமைப்பு கட்டுப்பாடுகள் காரணமாக, குறைந்த நேர மின்விநியோகம் செய்ய நேரிடும் போது, தினசரி பத்திரிக்கை, மின்னணு ஊடகம், குறுஞ்செய்தி போன்றவற்றின் மூலம் பாதிக்கப்படும் அனைத்து நுகர்வோருக்கும் பரவலான தகவலை முன்கூட்டியே தெரிவிக்க வேண்டும்.<br><br>(6) மின்பகிர்மான உரிமதாரர் மின்தடை மற்றும் மீண்டும் மின்வழங்கலை கண்காணிப்பதற்கு, முடிந்தவரை தானியங்கி கருவிகளைக் கொண்டு தானாக இயங்கக்கூடிய ஒரு பொறியமைப்பை ஏற்படுத்த வேண்டும்.<br><br>(7) மின்பகிர்மான உரிமதாரர், வட்டவாரியான நுகர்வோரின் நம்பகத் திறன் குறியீடுகளை மதிப்பாய்வு செய்வதற்கும் கண்காணிப்பதற்கும், மேற்கூறியவற்றுடன் தொடர்புடைய துணைப் பொறிமுறையை உருவாக்க வேண்டும். |
| 11. | **இணைப்பு**<br><br>செயல்திறன் மற்றும் ஈட்டுத்தொகை கட்டியது ஆகியவற்றில் உள்ள முன்னேற்றம் பற்றிய தகவலை அனுப்பும் படிவம்<br><br>xxx | **பின்னிணைப்பு**<br><br>செயல்திறன் மற்றும் ஈட்டுத்தொகை கட்டியது ஆகியவற்றில் உள்ள முன்னேற்றம் பற்றிய தகவலை அனுப்பும் படிவம்<br><br>xxx |

(தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி)

சென்னை-600 032,
2024 பிப்ரவரி 7.

**சி. வீரமணி**
*செயலாளர்,*
*தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்.*

PRINTED AND PUBLISHED BY THE COMMISSIONER OF STATIONERY AND PRINTING, CHENNAI
ON BEHALF OF THE GOVERNMENT OF TAMIL NADU